புராணிகர், கலாநிதி

திரு. தி. [illegible]

அவர்கள்

[illegible]

16330

சிவமயம்

அடையாறு, சென்னை

திருச்சிற்றம்பலம்

திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய

திருவேற்காட்டுத்தேவாரம்.

பண்-பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

ஒள்ளிதுள்ளக்கதிக்காமிவனொளி
வெள்ளியானுறைவேற்கா
டுள்ளியாருயர்ந்தாரிவ்வுலகினிற்
றெள்ளியாரவர்தேவரே. (க)

ஆடனாகமசைத்தளவில்லதோர்
வேடங்கொண்டவன்வேற்காடு
பாடியும்பணிந்தாரிவ்வுலகினிற்
சேடராகியசெல்வரே. (௨)

பூதம்பாடப்புறங்காட்டிடையாடி
வேதவித்தகன்வேற்காடு
போதுஞ்சாந்தும்புகையுங்கொடுத்தவர்க்
கேதுமெய்துதலில்லையே.

திருவேற்காட்டுத்தேவாரம்.

ஆழ்கடலெனக் கங்கைகரந்தவன்
வீழ்சடையினன் வேற்காடு
தாழ்வுடைமனத் தாற்பணிந்தேத்திடப்
பாழ்படும்மவர் பாவமே. (௪)

காட்டினானுமயர்த்திடக் காலனை
வீட்டினானுறை வேற்காடு
பாட்டினாற்பணிந் தேத்திட வல்லவ
ரோட்டினார்வினை யொல்லையே (௫)

தோலினாலுடை மேவவல்லான் சுடர்
வேலினானுறை வேற்காடு
நூலினாற்பணிந் தேத்திட வல்லவர்
மாலினார்வினை மாயுமே. (௬)

மல்லன்மும்மதின் மாய்தரவெய்தவோர்
வில்லினானுறை வேற்காடு
சொல்லவல்ல சுருங்காமனத்தவர்
செல்லவல்லவர் திக்கமே. (௭)

மூரல்வெண்மதி சூடுமுடியுடை
வீரன்மேவிய வேற்காடு
வாரமாய்வழி பாடுநினைந்தவர்
சேர்வர்செய்கழ றிண்ணமே. (௮)

பரக்கினார்படுவெண்டலையிற்பலி
விரக்கினாருறைவேற்காட்டூர்
அரக்கனைம்மலையடர்ப்பட்டாவிறை
நெருக்கினாரைநினைமினே. (௯)

மாறிலாமலரானொடுமாலவன்
வேறலானுறைவேற்கா
டீறிலாமொழியேமொழியாவெழில்
கூறினார்க்கில்லைகுற்றமே. (௧0)

விண்டமாம் பொழில்சூழ்திருவேற்காடு
கண்டுநம்பன்கழல்பேணிச்
சண்பைஞானசம்பந்தன்செந்தமிழ்
கொண்டுபாடக்குணமாமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

மகாமஹோபாத்யாய, டாக்டர்
உ. வே. சா[illegible] நூல் நிலையம்
அடை[illegible]ென்னை-20

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்
சென்னை - 600090

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருவேற்காட்டுப்புராணம்.

வலம்புரிநாயகர்வணக்கம்.

நலம்புரிநாராயணனென் முகனிந்திராதியர்களனைவரும் ஞானப், புலம்புரிபர தவமுனிவர்தம் பிரானைத்தற் சித்தி யெலாம் பொலிவினின் வாய்ந்த, குலம்புரியோகியர் சூழ மெழிற்றிருவேற்காட்டகத்திற் குலவானின்ற, வலம் புரிவிநாயகனார் மலர்ப்பாதாம்புயங்களைவணங்குவாமாக்.

நூல்.

மெய்ப்பொருள் வினாச்சருக்கம்.

கம்பைபாயுந்திருக்காஞ்சிமாநகரிலே கருணைத் தடங்கடலாகிய காமாட்சியம்மை சமேதராயெழுந் தருளியிருக்கும் ஏகாம்பரநாதனை, அம்புயாசனனாகிய நான்முகக்கடவுள் அருச்சனைசெய்துகொண்டிருக்கை யில், ஒருநாள் சிலவைதிகசைவ முனிபுங்கவர்கள் அவ் விடம்வந்து பிரமனைவணங்கி ஐயா! நாங்களிதுகாறும் இல்லறதருமத்தினைச் சுகமாகநடத்தி வாழ்ந்து வந் தோம். இனியருமையான ஞானயாகமியற்ற விச்சை

கொண்டாடத்தக்கவன்றேயும். அந்தத்தியமெய்யாப்பண்ணிய பூமியிலே பக்கரட்டமதனைவெண்டுமென வேண்டிக்கொண்டனர். பங்கயன் கேட்டுப் பரிவுகொண்டு சிவார்ச்சனைசெய்து கொண்டு பந்த நாதர் திருக்கரத்திலுள்ள ஒரு தருப்பைப்புல்லினை எடுத்து வேதியாக (ரக்காமாக) வனைத்துப் பூமியிலிருட்ட அதினைராசனே! இதன்பின் நீங்கள் போமின். இத்தருப்பை போட்ட விடத்திலிடமே நீங்கள் தெய்வமாக வப்யப் யாகந்தேசந்தொடு தலமென்றனர். அங்கேயிருந்து தருப்பை பூமியின் தென்றிசையிலுள்ள ஒரு அழகிய வனத்திற் றங்கியது. முனிவர்களும் அகஸ்தியர் பெருந்தவப் பயன்னைத் தினையடைந்து, தெய்வமெல்லாருக்கு விரைவு சப்பினைக் கொண்டு ஒரு வைதிக விசித்திர யாகசாலையினை நியமித்துக்கொண்டு சந்திரசேகரனாகிய சாம்பசிவனை மனதில் தியானஞ்செய்து அநேகயாகங்களைச் செய்து வருவாராயினர். ஒருநாளவ்விடத்திற்கு, முழுநீறணிந்த புண்ணியமுனிவராய், அங்கமனைத்தும் உருத்திராக்கமணிந்தவராய், பஞ்சாட்சர மகாமந்திர தியானஞ்செய்பவராய், சடைமுடி தரித்தவராய், கமண்டலம் தண்டம் தாங்கினவராய்ச் சூதமாமுனிவர் வந்தெழுந்தருளினர். அவரைத் தரிசித்தவுடன் தவசிகளியாவருமெழுந்தெதிரோடி யழைத்துவந்து தருப்பாசனத்தி லிருக்கச்செய்து சோடசோபசாரம்புரிந்து, வணங்கிச்சூழ்ந்திருந்து சொல்வாராயினர், வேதாகம இதிகாச புராணங்களை நன்கு தேர்ந்த விப்பிரசிகாமணியே! விரிந்

சன் விதித்தபடி வெகுகாலமாக இவ்விடத்தில் யாக
மியற்றி வருகிறோம். எங்கள் தவப்பயனின் பிரயோ
சனமாகத் தேவரீரிவ்விட மெழுந்தருளப் பெற்றோம்.
எங்கள் பூர்வகுறை யனைத்துந் தீர்ந்தோம். எங்க
ளுக்குண்டாயிருக்கு மொரு பெரிய சந்தேகத்தினை
யின்று நிவர்த்திசெய்தருளவேண்டும். அஃதாவதுநாங்
கள் நெடுங்காலமாக வேதாகமங்களையெல்லா நன்கு
படித்துவந்தும், சர்வலோகைக சரண்யனாகிய சாம்ப
சிவத்தின் சரணைச்சார்வதற் கேதுவாகிய திருவருளெ
ன்னு மெய்ப்பொருளினுண்மையினை யறிதற் கேலாது
கலக்கமுற்ற சிந்தையுடையவர்களா யிருக்கின்றோம்.
எங்கள் சிந்தை தெளியத்தக்க வொரு சூழ்ச்சி தெரி
வித்தருளவேண்டு மென்றனர். கேட்ட சூதமுனிவர்
தமதிருகண்களினு மானந்தக் கண்ணீர்ததும்ப, உரோ
மஞ் சிலிர்த்திட, அம்பலத்தின் கண்ணே ஆனந்தநிர்த்
தனம் புரிந்தருளும் ஆண்டவனை மனதில் தியானித்து,
சிறிதுநேரம் பரவசமடைந்திருந்து விழித்துச் சொல்
லுவாராயினர். நைமிசாரண்ணியவாசிகளே ! நீங்கள்
பலகலைக்கு மெட்டாத பரம்பொருளையுணர விரும்பி
னீர். உங்கள் புண்ணியமே புண்ணியம். நீங்கள் கே
ட்ட மெய்ப்பொருளின் உண்மையினைப் பூர்வகாலத்
தில், அந்திவண்ணனாகிய அருட்பெருஞ் சோதியாம்
அமலன் நந்தியம்பெருமானுக் குரைத்தனர். அவர்
சனற்குமாரமுனிவர்க் குபதேசித்தனர். அவர் வியா
சமாமுனிவர்க் கருளினர். அவரடியேனுக் கனுக்கிர

கித்தனர், அவ்வுண்மை பதினெண்புராணத்தி லொன்றாகிய காந்தத்திலே, சனற்குமாரசங்கிதையிலே, காளிகாகண்டத்திலே, தீர்த்தக்காதையிலே உள்ள வொரு தலத்துற்றிடு முயர்பெருஞ் சரித்திரத்தி லுள்ளது. அதனை யுங்கட்கு விரித்துரைப்பேன். அன்புடனமைதியாயிருந்து கேட்பீராக.

மெய்ப்பொருள் விருச்சருக்க முற்றிற்று.

சனற்குமாரச் சருக்கம்.

சைவாசார துல்லியர்களே! இலட்சம் யோசனை பரப்புள்ளதாகிய நாவலந்தீவிலே, இமயமுதலிய மலைகளாற் சூழப்பட்டு, பதினாயிரம் யோசனை யாழ்ந்து ஆயிரத்து நூற்றுநான்கு யோசனை யுயர்ந்துள்ள மேருமலையில் சதசிருங்கமென்னு மிடத்தில், நான்முகனுக்குரியநகரில் அனேகமாயிரம் யோகிகள் தன்னைச்சூழ்ந்துகொண்டிருக்க, சனற்குமார முனிவர் நின்மலனாகிய நீலகண்டனை மனதில் தியானஞ் செய்துகொண்டு நெடுநாள் யோகத்திலிருந்து கொண்டிருந்தனர். அங்ஙன மிருக்கையில் ஒருநாள் தேவாதி தேவனாகிய திரியம்பகன் தமது தேவியுடன் தருமவிடைமேலெழுந்தருளித் தேவர்கள் பற்பலர்சூழ்ந்துவர ஆகாய வழியே சதசிருங்கமலைக்கு நேராகச் சென்றுலவித் திருக்கைலாய மெழுந்தருளினர். அப்போது ஆண்ட

வன் றிருக்கோல மைப்பைத்தினைச் சிறிதுங்கவலியாது யோகத்திலிருந்த சனற்குமார முனிவனை நந்தியம்பெருமான் கண்டு கோபங்கொண்டு ஒட்டகம்போல விருந்து காமது அம்மையப்பனை வணங்காதிருந்ததனல் ஒட்டகமாகக்கடவையெனச் சாபங்கொடுக்க, இதற்கென்னசெய்வலெனவெண்ணியுடைந்த சனற்குமார முனிவர் ஒட்டகமாகி வனத்தேதுந் திரிந்துகொண்டிருக்கையில், நான்முகக்கடவுள் ஒருகாலத்தி லவ்வனத்திற் போக நேரிட்டு, அவ்வொட்டகத்தினைக் கண்டு அந்தோ! என்புத்திரனுக் கித்தன்மையான கதிவாய்த்தற்குக் காரணம்யாது? இவனுக்கு நன்மை தருவனவாக நாமென் செய்வோம்? என ஆலோசித்து முன்னடந்தவைகளை யெல்லாம் யோகத்தாலறிந்து அத்தோடத்தினை நீக்கும்பொருட்டுக் கண்ணுதற் கடவுளைப் பூசித்துக் கருணையங்கடலே! கங்கைகௌரியா! கறைமிடற்றோய் காமகாதா காலகாலா கயிலைவாசா கருணைசெய்க கருணைசெய்க. அடியேனுக் குன்னையல்லால் வேறு திக்கில்லையென இரண்டு கண்களினுந் தாரைதாரையாய் நீர்சொரிய நெக்குருகித் துதிசெய்தனர். பிரமன்வாழ்த்திய மொழியானது அழகிய திருச்செவியிற் சென்றேறிய மாத்திரத்தில் திருவருள் பெருகியதனால் ஆதியந்தமில்லாத அழகிய வம்பலவாணன் பிரத்தியட்சமாகிப் பங்கயனே! நீவேண்டும் வரத்தினை விரைவில் விளம்புகவெனத் திருவாய்மலர்ந்தருளுதலும், மலரோன் நம்மகாதேவன் கீர்த்தியினைப்

புகழ்ந்து பாடிப்பாடிச் சந்தோஷத்தனும்பு நின்று சொல்லத்தொடங்கினர். சங்கார சனற்குமாரன் சதசிருங்கமலையில் தேவர் இணையடிகளையே நினைந்து சிவயோகஞ்செய்து சமாதியிலிருந்தபோது, நிட்டையில் மனமழுந்தி யிருந்தமையால், தேவர் திருக்கோல வைபவத்தினை யறியமற்போய்விட்டான். அந்தகான் அவ்விடத்து வந்த நந்தியம்பெருமான் சபித்தபடியால் ஒட்டகவடிவமாயினான். இச்சாபத்தினைத் தீர்க்கருள்கவென் றிரந்து தொழுதல் செய்ய வப்பெருமான் இரணியகருப்பனை நோக்கி, மறையோனே! யப்படியாய் நன்மைக் கேதுவாகச் செய்யுந் தண்டனைகள் நம்மால் விலக்கமாட்டா. இதை நந்தியே நீக்குவனென்றுரைத்து மறைந்தருளினர். பிரமன் நந்தியெம்மண்ணலை நோக்கித் தொழுதுகாலந் தவர்புரிய அவர் மகிழ்ந்து வெகுர்வந்த மறையவனே! நல் லார்க்கண் கண் விழிப்புடன் தவஞ்செய்தும் காணரியகடவுளாகிய கண்ணுதற்பெருமானைக் கண்டு களித்துருகி வணங்காததாற்சபித்தோம் இனியவ்வொட்டகவடிவினீங்கி நமது மாணவகனுக்குச் சிவஞானமடைந்து சகலகலா பாரங்கதனாய் வாழ்வன் என்பாலனுப்புக வெனக்கூறிச் சென்றனர். பாரதி கொழுநன் பரவசமடைந்து தமது கணங்களை யழைத்து ஒட்டக உருவங்தாங்கியுள்ள தன் மைந்தனை அவர்களுடன் கூட்டி நந்திதேவர் சந்நிதானத்தில் விடுமாறு கட்டளையிட்டுச் சுகமாக வாழ்ந்தனர்.

சனற்குமாரச்சருக்க முற்றிற்று.

வே த வ ன ச் ச ரு க் க ம்

தத்துவஞான குசிகனே! திருப்பாற்கடலி னழகு மாறிப் பின்னிட வெண்சோதி விரிக்கும் வெள்ளியங் கிரியிலே, பல்லாயிரம் சிவகணங்கள் சூழ்தர நடுவில் நாயகமாக வெழுந்தருளியிருக்கும் உபயாம்பு வாகிய நந்தி யெம்பெருமான் சந்நிதியில் பிராகணங்கள் ஒட்டக வடிவத்துடனிருக்குஞ் சனற்குமார முனிவனைக் கொணர்ந்துவிட அம்முனிவர் நந்திதேவரைத் தரிசித்தமாத்திரத்தில் ஒட்டகவடிவ நீங்கப்பெற்றுப் பழைய முனிவரன் வடிவமாகி நின்றனன் அன்று அம்முனிவனை நந்திதேவர் முகங்குளிர நோக்கி ஆசீர்வதித்து வேதாகம முதலிய சகல கலைகளையும் போதித்துத் தமது மாணவனாக விருக்கக் கட்டளையிட்டுச் சமீபத்திருந்து கொண்டிருக்க வாஞ்ஞாபித்தனர். அப்போது சனற்குமாரன் றனது ஆசிரியரின் றிருவடிகளிற் பற்பலதரம் விழுந்தெழுந்து கைகுவித்து, எளியேனை யடிமையாக் கொண்ட வெம்பெருமானே தேவரீர் கருணையினாற் சகலகலைகளையு நன்குணர்ந்தேன். மெய்யுணர் வுடையவர்களே சிவஞான மடைவரெனவும், அச்சிவ ஞானத்தினாலேயே முத்தியடைதல் வேண்டுமெனவும், சம்புசப்த வாச்சியார்த்தனாகிய சிவபெருமானை மன வாக்குக் காயங்களா லறியப்படாதெனவும், ஞான மொன்றினாலேயே தெரிதற்கேது வாகுமெனவுங் கூறினை. அன்றியும் இவ்வுலகில் தேகமெடுத்தோர் பிணி

யாகிய பெருங்கடலினை நீந்திப் பேரின்ப மடைதல் பெரிதுங் கஷ்டமாவதுபோல, திருவருட் பெருந்தவர் வீடு பேறடையாரெனவும் விளம்பினை இத்தகைய வரியசித்தியினை யடையத்தக்க பெரியரிவ் வுலகத்தி லரிது ஆகையால் யாவரு மிலேசாகப் பரிபூரண சச்சிதானந்தப் பிழம்பாகிய சிவபெருமான் றிருவடியை யடைதற்கேது எதாகினு முண்டோ கட்டளையிட்டருள வேண்டுமென்றனர். நந்தியம் பெருமான், மைந்த ! நமது பெருமான் றிருவாய் மலர்ந்தருளிய வேதாகமங்களை நன்குணர்ந்த அந்தணர்கள் முதலில்பிரமசரிய நிலையிலிருந்து சகல கலைகளையுங்கற்று இல்லற நிலையிலிருந்து உலக தருமங்களை நிறைவேற்றி, வானப்பிரஸ்த நிலையிலிருந்து தவநடத்தி சந்நியாசி நிலையிலிருந்து வேதத்தின் கருமகாண்ட ஞானகாண்ட உண்மையினைத்தேர்ந்து பிரணவப்பொருளின்னதெனத் தெரிந்து நிட்டைகூடிடில் நின்மலன்றோன்றி அனுக்கிரகஞ் செய்தருளுவன். இத்தகைய வொழுக்கம்யாருமடைந்துய்தல் மிக வரிதாகலின், பிராமணன் முதல் பஞ்சமனீறாக வுள்ளவரும்; புல் முதல் சிதலீறாக வுள்ளவைகளும் இலேசாகமோட்ச மடைய வேண்டுமாயின் பெருங்கருணைகுடிகொண்டிருக்கும்நமதுசிவபெருமானெழுந்தருளியிருக்குந்திவ்யதலங்களில் வாழ்தலினாலேயே மோட்சமுண்டா மென்றனர். இவ்வாறுதமதுதேசிகர் கூறியவார்த்தையினை முனிவர்கேட்டு மகிழ்ந்து அத்தகைய தலங்களுள் மேன்மைபெற்றதலமியாதென்றனர்

நந்தியம்பெருமான் சிறிதுநேரந் தியானத்திருந்து பின்னர் சனற்குமார முனிவனை நோக்கி, மகனே! ஒருகாலத்தில் மகா கைலாயத்திலே சிவபெருமான் சந்நிதானத்தில் உலகமாதாவாகிய உமையம்மை எழுந்து நின்று வணங்கி, சுவாமீ! பிரமாதி தேவர்களடைதற்கரிய சிவஞானத்தினைச் சிறிதுந்தெரிந்து கொள்ளக் கூடாத புருஷர்கள் முதலியவர்களெவ்வாறு? அவை மோட்சமடைதலெங்ஙனம்? என்ன, பார்வதீ! நாமெங்கும் சர்வவியாபகமாக விருக்கினும், நமதன்பர்கள் உய்யும்வண்ணம் பற்பல தலங்களில் அன்புடனமர்ந்து வாழ்வோம். இத்தலங்களி லொருபொழுது ஒருவன் வசிக்கினும் அவன்செய்த பாவமனைத்தும் நீங்கப்பெற்றுச் சுத்தனாகி மோட்சமடைவனென்றனர். அத்தகைய தலங்களுள்ளும் உத்தமமாகிய தலமொன்றினைத் தெரிவித்தல் வேண்டுமெனக் கேட்டுக்கொண்ட அம்பிகையினைநோக்கி அமலனாகிய சிவபெருமான் சொல்லுவராஞர். பெண்ணே! உலகமனைத்தும் புகழ்ப்பெற்ற காஞ்சிமாநகரத்திற்கு ஈசானதிசையில் மூன்று யோசனை தூரத்திலும், சமுத்திரத்துக்கு வருணதிசையில் ஒருயோசனை தூரத்திலும், திருப்பாசூரினுக்கு அக்கினிதிசையிலும், திருமயிலைக்கு வாயுதிசையிலும் [illegible]தாயத்திற்கு நிருதிதிசையிலும் உள்ள தலமொன்றுண்டு. அஃதெம்மாற் படைக்கப் பட்டது அதன் பெருமையினை யெடுத்துக்கூற மிகவரிது. அமலையே! அத்தலத்திற்குமணிவண்ணநகர், பானுநகர், பரசுராம

நகர், வல்லிநகர், இரதவைநகர் கும்பநகர், பனைவாள
நகர், முத்திநகர், தேவநகர், ஆதிநகர், புண்டரிகமா
நகர், நாதநகர், சோதிநகர், ஞானநகர், மாதவநகர்,
அத்தியனநகர், வேதநகர், சுதவாரநகர், வேலைவன
மெனப் பற்பல பெயருண்டு. இங்கு வடவாமுகாக்கினி
யாலும், மகாப்பிரளயத்தாலும், காலன் தூதர்களா
லும் இடையூறியாதநகரம். விடம், பிணி, பசி முதலிய
வற்றால் துன்பஞ் செய்யாதநகரம். மாயவினையினைத்
தூர் தீர்க்கத்தக்கநகரம். இத்தலத்தில் ஒரு நிமிஷ
நேரமிருந்தாலும், ஆசையுடன் மனத்தில் ஒருதரம் நினை
த்தாலும், இத்தலத்தின் வழியாக வேற்றூருக்குச்
சென்றாலும், தவறாக வாயில் இத்தலப்பெயரைச் சொல்
லினும், அத்தகையோர் புவியாளுமன்னரா யடுத்தசென்
மத்திலிருந்து பின்னர் முத்திச்செல்வத்தினை யடைவர்.
இத்தகைய அருமையும் பெருமையும் வாய்ந்த திரு
வேற்காட்டில், வேதசொரூபமாகிய வெள்வேலமரத்
தின் மூலத்தடியில், நாம் திருக்கோயில் கொண்டெழுந்
தருளியிருப்போம். அவ்விடத்துள்ள நமது அருட்
சொரூபமாகிய சிவலிங்கத்தினை யசுர்வேதம் அமரர்பதி
யெனவும், அத்தலத்தினைச் சாந்தோக்கியோப
நிடதம்பரமாகாசமெனவும், பிரமசூத்திரமெனவும்பேசும்.
அதர்வணவேதம் சொர்க்கலோக மெனச்சொல்லும்,
மற்றைய ஆகமங்களும் உபநிடதங்களும் இத்தலத்
தினைப் பலவாறு தோத்திரித்துக் கொண்டேயிருக்கு

மென்றனர். இங்ஙனமித்தலத்தின் மகிமையினை நந்தி தேவர் சனற்குமாரமுனிவருக்குச் சாற்றினர்.

வேதவனச்சருக்க முற்றிற்று.

இந்திரச்சருக்கம்.

—(:)—

பற்றற்று விளங்கும் பரமஞானிகளே! பிராமணகுலத்திலே, குசிககோத்திரத்திலே பிறந்த கவுசிகனென்னும் பெயரினைவாய்ந்த சிவபக்தசிரோமணியொருவர் வேதாகமபுராண விதிகாசங்களை யெல்லா நன்குணர்ந்தவராய், சிவபெருமானையே சிந்திக்குஞ் சிந்தையுடையவராய், விபூதியுருத்திராக்கத் திருமேனியராய், மோட்சவிதாயகமாகிய பஞ்சாட்சரத்தினையே செபிக்கு நாவினராயுள்ளவர். இவர் திருவேற்காடென்னுந் திவ்வியதலத்தில் நடக்கும் பிரமோற்சவத்தினைத் தரிசிக்கும் பொருட்டுத் தன்மனைவி மக்களுடனே யெழுந்தருளிவந்தனர். அவ்வூர் சைவவேதியர்கள் அப்பெரியவரைக்கண்டு, அளவிலாமுகமன்கூறி, அஞ்சலிபுரிந்து, அவரடிவணங்கிஐய! தேவரீர் நல்வரவினால் எங்கள் வினையனைத்து எம்மிடத்தில் விடைபெற்றேகின. எங்கள் மாளிகைக்கெழுந்தருளி விருந்துண்டு எங்களைக் கிருதார்த்தராக்க வேண்டுமென் றழைத்துக் கொண்டுபோய் வேண்டிய உபசாரமனைத்து மியற்றிச்

சந்தோஷிப்பித்து ஆலயத்தின் பிராகார மண்டபத்தில் எழுந்தருளச்செய்து நாங்களெல்லோருஞ் சூழ்ந்திருந்து கல்விக்கடலாய் விளங்குங் கவிஞனே! இத்திருவேற் காட்டுத் தலத்தின் மகிமையனைத்தையு மெங்கட்கு விரி வாகவெடுத்து விளக்கவேண்டுமென விரும்பினர். அப் போது புங்கவரிசிகள் வேதியர்களை நோக்கிச் சொல்லு வாராயினர். ஐயன்மீர்! காஞ்சிமாநகரினுக்கு ஈசான திசையிலுள்ள இத்தலத்தில் வேதமானது ஒருவெள் வேலமரமாக விளங்குகிறது. இதனடியில் சர்வலோக ஆதாரபூதனாகிய சிவபெருமான் சிவலிங்கரூபமா யெ ழுந்தருளியிருக்கின்றனர். ஆதலின் இத்தலத்திற்குத் திருவேற்காடெனப் பெயருண்டாயது. இப்பெருமானை விநாயகர், சுப்பிரமணியர், விஷ்ணு, பிரமன் இந்திரன், கின்னரர், முனிவர், சித்தர், கந்தருவர் முதலிய வெண் ணிலர்பூசித் துய்ந்தனர். இத்தலத்திற்குத் தெற்கில் * வேததீர்த்தம் ஒன்றுளது அதன்மகிமையினையெடுத் துச்சொல்ல வெத்தகையினர்க்கு முடியாது. ஆதிவா ரந்தோறு மித்தீர்த்தத்தி லாடுவரேல், அங்கங்குறைந்த பெருநோயாளர் மன்மதனைப்போல் விளங்குவர். இத் தடத்து நீராடி உதையத்திலொரு தருப்பணஞ்செய்த பேர் பாவமனைத்து நீங்கப்பெற்று எளிதில் வீட்டை

* இத்தீர்த்தம் கோயிலுக்குத் தெற்கில் பெரிய தோப்பில் நடைபாவியாகவிருக்கிறது.

‡ குரோசம் - கூப்பிடுதூரம்.

குவர். இத்தீர்த்தத்தி லொருதுளிநீர் அருந்தினோர் புத்திரப்பேறு வேண்டினும், செல்வம் வேண்டினுந் தடையின்றிப் பெறுவர். இப்பொய்கையில் பிதிர்திவசங்களில் மூன்று தருப்பணஞ் செய்யின் அவர்கள் குலத்து முன்னோர்கள் நரகத்திலிருக்கினும் அவர்களைப் போதே அருங்கயிலையடைவர். இத்தடத்திற்கு வடகிழக்கில் ஒரு ‡ குரோசதூரத்தில் இந்திரன் பூசித்த தலமொன்றுண்டு அதனருமையினை யாம் கூறுகுவேன் கேண்மின்.

வராககற்பத்தில் ஆறாவதாமனுவந்தரத்தில் சிபியென்னு மரசன் இந்திரப்பட்டம்பெற்று, இந்திராணி சமேதராய், கற்பக விருட்சத்தின்கீழ், வானவர் வணங்க, உருப்பசியாழ்மீட்ட, திலோத்தமைபடிக்கமேந்த, மேனகையடைக்காயுதவ, சோபனை சாமரையிரட்ட, அரம்பை மணித்துகில்வீச, வாணி பனிநீர்தெளிப்ப, சுடுகி விசிறிபோட, விபுலைபல்லாண்டு கூற, மற்ற மங்கையர் விஜயம்பாட, சிந்தாமணி, சங்கநிதி, பதுமநிதி, காமதேனு முதலிய விட்டவேலைசெய்ய, தேவர், மருத்துவர், கின்னரர், உரகர், விசுவதேவர், வசுக்கணம், அசுவனிதேவர், உபேந்திரன், சூதர் முதலிய விண்ணவர் சூழ்ந்திறைஞ்சச் சிம்மாசனத்தி லெழுந்தருளி, அசுரர்களை அதஞ்செய்த அரியவச்சிராயுதத்தைத்தாங்கி, தன்னிகரின்றிவீற்றிருக்கையில் இந்திரன் தன்மனத்தி லடியில் வருமாறு எண்ணினன். ஆ! ஆ! நான் இத்தகைய ஆடம்பரத்துடன் இப்பொன்னுலகி

லிருந்து, அரசாட்சிசெய்து கொண்டிருந்து, என்னுடைய காலமெல்லாம் மன்தனுடைய மலர்ப்பாணங்களின்வழியே எனது பஞ்சேந்திரியங்களைச் செலுத்தி அஞ்ஞானச்சேற்றி லழுந்தி, பன்றிபோலுழந்து மாதரென்னும் பாம்புகளின் வாய்ப்பட்டு மீளாதவனாகி வாளா இறப்பதற்கே தயாராயிருக்கின்றனன். இச்செல்வமனைத்தும் நிலையற்றதாக விருக்கிறது. இனியொரு நிமிடமும் இதிற் பற்றுவைப்பது அடாது, என்னுடைய வாழ்நாளு மொருநிலையுடையதோ! மானுடவருஷ மொன்றுகொண்டது தேவர்கட்கு ஒருநாள், இவ்வகைய தினங்கள் முப்பதுகொண்டது தேவர்கட்கு ஒருமாதம். இப்படி பன்னிருமாதங்கள்கொண்டது தேவர்கட்கு ஒருவருடம். தேவவருடம் நாலாயிரங்கொண்டது கிருதயுகம். தேவவருடம் இரண்டாயிரங்கொண்டது துவாபரயுகம். தேவவருடம் ஆயிரங்கொண்டது கலியுகம். இவ்வகையாகக்கூறிய நான்குயுகங்கட்கும் தேவவருடம் பதினாயிரம். இவ்வகைய சதுர்யுகங்கள் எழுபத்தொன்று கழிந்தால் ஒருமன்வந்தரம். சதுர்யுகங்கள் ஆயிரங்கொண்டது ஒருகற்பம். ஒருகற்பத்திற்குப் பதினான்கு மன்வந்திரங்கள் கழிகின்றன. இத்தகைய கற்பங்களிதுவரையில் ஆயிரம் பதினாயிரங்களாக் கழிந்தன ஒருகற்பமானது பிரமதேவனுக்கு ஒருபகல். அத்தகைய பகல் ஆயிரங்கொண்டது பிரமனுக்கு ஒருவருடம். அத்தகையவருடங்கள் எண்ணாயிரங்கழிந்தால் பிரமனுக் கோர்யுகம்,

அத்தகையபிரமாவானவன் அவிந்தழிந்தால் பிரமனுக்
கோர்சவனாம். அத்தகையவன் முப்பதினாயிரமழிந்தால்
பிரமதேவனுடைய ஆயுள்முடியும். பிரமதேவனுடைய
வொருபகலில் பதினான்கு இந்திர பட்டங்கழியும். பிரம
னுடைய ஒருமாதத்தில் நானூற்றிருபது இந்திரபட்
டங்கழியும். வருஷத்தில் ஐயாயிரத்துநாற்பது இந்
திரபட்டங்கழியும். ஆயுள்முழுவதும் ஐந்து லட்
சத்து நாற்பதினாயிரம் இந்திரபட்டங்கழியும். இவர்க
ளெல்லாம் நானும் ஒருவனாகாமே. நானும் போகத்தைத்
தொழியவேண்டியவனானேனே. எத்தனைகால மிருக்கினு
மழிவது நிச்சயம். இவ்வாறாயாப்பிரபஞ்சத்தின் செயல்
நிகழ்வதாகும். ஆதலினித் தொடர்பினையறவே யொ
ழித்தல் வேண்டுமெனப் பலவாறெண்ணியவனாய்க் கும
விடை கொடுத்தனுப்பிச் சிம்மாசனத்தினின்று நீங்கி
அந்தப்புரஞ்சென்று தனித்திருந்து சிலவேளையேகித்
தனது ஆசிரியராகிய பிரகஸ்பதிபகவானை யழைப்பித்
துத் தனக்குண்டாகிய இந்திரலோகவாழ்வினை யெடுத்
துரைக்க ஆசிரியர்கேட்டு மகிழ்ந்து அமரர் அதிபதி
யே! பூர்வ புண்ணியவசத்தினால் இத்தகையவெண்ண
முனக்குண்டாயது. ஒருவருமடைதற்கரிய பெருஞ்
செல்வத்தில் வெறுப்புண்டாயது. மோட்சவிச்சையுனக்
கதிகரிப்பதைப்பற்றி நான் மிகவியக்கின்றேன். இவ்விச்
சையின்பய னெதனாலு முண்டாகாது, விண்ணவர்
அரசே! நம்முடைய பழைய வினையனைத்தையும் போ
க்கப் பரம்பொருளொன்றுண்டு. அப்பொருள் வேதங்

களினாலும், அயனாலும், மாலாலும், மனத்தினாலும், வாக்கினாலும், அவிகளாலும், அறிதற்கரிதாய் நிற்றலின் எத்தன்மைய சாதனங்களாலு முடியாது. அவன் ஆன்மாக்களினிடத்தில் வைத்த கருணையினால் எழுந்தருளியிருக்கும் தலங்களிற்சென்று பஞ்சேந்திரியங்களைப் பொருவழிப்படுத்தி யநுஷ்டானமாக விளங்குஞ் சிவலிங்கப் பெருமானைப் பூசிக்கின் முத்திப்பேறுண்டாமென்றனர். கேட்ட விக்கிரன். ஐய! அத்தகைய முத்தியினை யெளிதிற் கொடுக்கத்தகுந்த தலமெங்குளது? கட்டளையிடவேண்டுமென, தேவகுரு அவனை நோக்கி அரசனே! தேவர்களனைவராலும் தினமும் புகழப்படும் திருவேற்காட்டினை யடைந்து மந்தாகினி தீர்த்தத்திற்படிந்து வேதநாயகனைத் தொழுவாயாக. உன்னுடைய பூர்வசென்மத்தில் ஆதிவாரத்தில் அந்தத்தீர்த்தத்தில் முழுகினை அதனா லிந்தச்சென்மத்தில் இந்திரனாயினை, இத்தீர்த்தம் கங்காநதியினும் சிறந்தது இத்தீர்த்தத்தி லொருவன் உள்ளன்புடனே ஒருதரமுழுகில் இந்திரனாயிருப்பன், இரண்டுதரமுழுகிற்பிரமனாய்ப் பிரகாசிப்பன், மூன்றுதரமுழுகில் விண்டுவாய் விளங்குவன், நான்குதரமுழுகில் நாமகாண்டவனாகிய சிவபெருமான் றிருவடியிற்சேருவனென்றனர். இவையனைத்தையுங் கேட்டமாத்திரத்தில் தேவேந்திரன் தனதாசிரியரிடத்தில் விடைபெற்றுத் திருவேற்காட்டினை யடுத்து மந்தாகினிதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து வெண்ணீறுதரித்து நித்தியகன்மமுடித்து வெள்வேலம

ரத்தடியி லெழுந்தருளியிருக்கும் விமலநாயகனை வணங்கி யருச்சனைபுரிந்து அந்நாயகனுக்குக் கிழக்குத்திக்கில் தன்பெயராலொரு * சிவலிங்கமும் ஒருதீர்த்தமுமுண்டாக்கிப் பூசித்துப் பலதரம்வணங்கி,

"மாயவன்கமலச் செங்கண் வாழ்பதாம்புயனேபோற்றி
தீயழும்பலங்காரத்தோரா சிந்தைசெய்செல்வாபோற்றி
மேயதோ பராபராய வெளியதாய்விளங்காநின்ற
நாயனேபோற்றி லோகநாயகாபோற்றிபோற்றி"

எனத்தோத்திரித்தபோது கறைமிடற்றுக் கண்ணுதற்கடவுள் மான்மழு சதுர்புஜ காளகண்டராய்த் திரிநேத்திர தாரியாய் இடபவாகனரூடராய் அம்மையிடத்தராய் எழுந்தருளி இமையவர் வேந்தனே! நினது பூஜைக்கு வியந்தோம் நினக்கு வேண்டும்வரம் யாது வினவுவாயாக வென்றனர். ஆயிரங்கண்ணன் ஆச்சரியமடைந்து ஆடிப்பாடி பற்பலதரம் விழுந்தெழுந்து என்னப்பனே! யென்னையனே! என்னுதியே! என்சோதியே நமஸ்காரம்! நான்பெற்றபாக்கியமே பாக்கியம். வேதநாயகனே! நான்பூசித்தவிந்தச் சிவலிங்கத்திற்கு வரந்தருலிங்கமெனவும், இத்தலத்திற்கு இந்திரபுர மெனவும் வழங்கக்கடவது, அடியேன் தேவரீர் திருவடி நீழலிருக்கத் திருவுளம்பற்றவேண்டு மென்றனர். சுவாமி இந்திரனைநோக்கி அன்ப! அங்ஙனமே பெயர் வழங்கக் கடவதாக. இன்னுஞ் சிறிதுகாலம் நீ இந்திரலோகத்

* இவ்விலிங்கமும தாத்தமும் ஆலயத்திற்கு நேர்கிழக்கில் வெள்ளிசகொல்லையி லிருக்கின்றன.

தினை யாண்டு பின்னர் சிவகணத் தலைவனாயிருந்து வாழ்ந்து நமது திருவடிப்பேற்றினை யடைவாயாகவெனக் கட்டளையிட்டு மறைந்தனர். இந்திரன் திருவேற்காட்டினைப்பிரிய மனமில்லாதவராகிச் சுவாமியின் ஆஞ்ஞையை மீறக்கூடாதவராய்த் தன்னுலகமடைந்து வாழ்ந்தனர். இவ்வாறு இந்திரன் பூசித்துப் பேறுபெற்ற வுண்மையினைக் கேட்டு வேதநாயகனுக்குத் தென்கிழக்குமுதல் ஈசான திசையீறாக அக்கினி, இயமன், நிருதி வருணன், வாயு, குபேரன், ஈசானன் ஆகிய எழுவருந் தங்கள் தங்கள் பெயரால் * தீர்த்தமும் ஆலயமுமுண்டாக்கி நெடுங்காலம் வேதநாயகனைப் பூசித்து வந்து தங்கள் தங்கள் உலகங்களையடைந்து சுகமாக வாழ்ந்துவந்தனர்.

இந்திரச்சருக்க முற்றிற்று

காங்கேயச் சருக்கம்.

மனமடங்கப்பெற்ற மாதவர்களே ! வெண்மை நிறந்தங்கிய வெள்ளியங்கிரியில் அகிலலோக நாயகரு கிய ஆண்டவன் அம்பாள் சமேதரா யெழுந்தருளி யிரு

* அக்கினி லிங்கம்-நாம்பலிலும், இயமன்லிங்கம் - செந்நீர்க் குப்பத்திலும், நிருதிலிங்கம் - மேட்டுப்பாளயத்திலும் வருண லிங்கம்-பாரிவாக்கத்திலும், வாயுலிங்கம்-பருத்திப்பேட்டிலும் குபேரலிங்கம்-சுந்தரசோழவாத்திலும், ஈசானலிங்கம் - சின்ன கோயிலடியிலு மிருந்துகொண்டிருக்கின்றன.

ந்தகாலத்தில் ஒருநாள் மூத்தப்பிள்ளையாராகிய விநாயகரும் இளைய பிள்ளையாராகிய சுப்பிரமணியரும் தாய் தந்தையர் முன்னிலையில் பாதச்சிலம்புகளில் சலிலென்னச் சத்திக்க அவர்கள் பரிமேறி பார்மீதுந் தோள்மீதுங் குதித்துவிளையாட இருமுதுகுரவருந் தமது அருமைப்புத்திரர்களைத் தாவியெடுத்து உச்சிமோந்து மார்பொடணைத்துக் கீழேவிட அவ்வருமைப் புத்திரர்கள் ஆலயத்தின் முகப்பில் விளையாடிக்கொண் டிருந்தனர், அச்சமயத்தில் பிரமாவானவர் கைலாயத் திற்கு வந்து நந்தியெம்பெருமானிடத்து விடைபெற்று ஆலயத்திற்சென்று சர்வதேவ தனார்ப்புதமாகிய சிவ பெருமானையும் செகதீஸ்வரியையும் தரிசித்துத் தோ த்திரம்புரிந்து விடைபெற்றுத்திரும்பி வந்த செருக் குடையவராய் அங்கு விளையாடிக்கொண்டிருந்த குழ ந்தைகளைக் கவனியாதவராய்ச் செல்லுகையில், சண் முகக்கடவுள் கண்டு பிரமனையழைத்துச் சமீபத்திரு ந்தி, நீயார் நின்பெயரென்ன? நின்தொழிலியாது? நீ யதில் வல்லவன்? என்றனர். பிரமன் கேட்டுக் குழ ந்தையெனமதித்துச் சிறிதிறுமாப்புடன் நான் மும்மூர் த்திகளி லொருவன். என்பெயர்பிரமன். நான் சிரு ட்டிக்குந்தொழிலே மேற்கொண் டிருப்பவன். என க்கு வேத நன்குவருமென்றனர். செவ்வேள் கேட்டுப் பிரமனே! நினக்குவேதம் நன்கு வருமாயின் அவ்வே தத்தின் முதலெழுத்திற்குப் பொருளென்ன வென்ற னர். பிரமன் சிறிதுமயங்கி, ஐயனே! வேதத்தின் முத

ளொளிர்தராய் விளங்குவது பிரணவம் அப்பிரணவத்திற்
குப்பொருள் மும்மூர்த்திகளே யாமென்றனர். உடனே
காங்கேயராகிய கந்தர் அப்பிரமன் நான்கு சிரங்களுங்
குலுங்கக் குட்டித் தன் சமீபத்திலிருந்த கணங்களை
யழைத்து இவனைக்கொண்டுபோய்க் கந்தகிரியிலுள்ள
வொருகுகையில் விலங்கிட்டுச் சிறைசெய்யுமென்றனு
ப்பி யதன்பின் தாமே சிருஷ்டித்தொழிலை யாரம்பித்
தனர். தேவர்கள் கேள்விப்பட்டுப் பயந்து நடுநடுங்கி
யோலென்றங்கே சென்று மகா கயிலாயத்திற்கோடிச் சர்
வைஸ்வரிய சம்பன்னரான சிவபெருமான் சந்நிதியில்
நடந்தவற்றையெல்லா முரைக்கப் பெருமான் கேட்டுத்
தேவர்களே! அப்பிரமன் மிகவுமடன். பிரமனுக்
கும் அன்னை வைதிபற்கு மதிபனைப் பரப்பிரம மாக
விளங்கும் நம்மையே பிரணவத்திற்குப் பொருளென
வேதங்கூறுவதுடன் நமது குமாரனாகிய சுப்பிரமணி
யத்தினை யாகத்தி லென்றுதாங் கூறும், இவ்வுண்மை
யினை யறியாது வேறுபொருள் பகர்ந்த அவனைச்
சிறையிடுத்தல் தகுதிதான். ஆயினும் நம் வே
ண்டுகோளுக் கிரங்கி அவனை விடுவிப்போ மெனச்
சொல்லி, நந்தியை யழைத்து நீ கந்தகிரிக்குச் சென்று
நமது புத்திரனைக்கண்டு பிரமன் குற்றத்தினை மன்னி
த்து அவனைச் சிறையினின்றும் விடும்படி சொல்லுக
வென்றவுடன், அக்கட்டளையினைச் சிரமேற்கொண்டு
நந்தியெம்பெருமான் சண்முகக்கடவுள் சந்நிதானத்
தை யடைந்து சுவாமியின் கட்டளையைச் செப்பலும்

அம்முருகப்பெருமான் கோபக்குறியை நோக்கிப் பய
ந்து திரும்பிப்போய்க் கண்ணுதலிடத்துக் கூற, சதா
சிவன் சாம்பவியுடனே இடபவாகனமேறிக் கந்தகிரி
க்கு எழுந்தருளக் காங்கேயர்கண்டு எதிரோடிவந்து
வணங்கக் குழந்தையை யெடுத்து மடிமீதிருத்தி அப்
பிரமனைச் சிறையினின்றும் விடுவாயாகவென்றவுடனே
அப்பிரமனைக்கொணர்ந்து தனது தந்தையின் சந்நிதா
னத்தி னிறுத்த கறைமிடற்றண்ணல் கருணைகூர்ந்து
அவ்வேதனுக்கு வேண்டிய புத்திகளைச் சொல்லி யனு
ப்பியபின்புத்திரனை நோக்கிக் குழந்தாய்! நாம் நந்தி
யை யனுப்பியபோது நம் கட்டளைப்படி நடவாது நஞ்
சொல்லினை மீறினையாதலின் நீ வேத வனத்திற்குச்
சென்று நம்மைப்பூஜைசெய்து வரக்கடவாயெனக்
கூறிக் கயிலைக்கெழுந் தருளினர்.

சுப்பிரமணியக்கடவுள் தந்தையின் ஆஞ்ஞைப்பிர
காரம் திருவேற்காட்டினைத் தரிசிக்கவேண்டுமென்கிற
மிகுந்த விச்சையால் கந்தகிரியைநீங்கிப் பூமியின்கண்
ணே தென்றிசைநோக்கி அனேகமான சிவத்தலங்க
ளைத் தரிசித்துக்கொண்டே செல்லுகையில் சிவகதா
சங்கீர்த்தன சீலராய் வந்துகொண்டிருக்கிற வியாக்கிர
பாத முனிவர்கண்டு ஆனந்தமடைந்து சாஷ்டாங்க
நமஸ்காரஞ்செய்து வணங்கி ஆறுமா முகப்பெருமா
னே! தேவரீர் தாய்தந்தையர்களைப் பிரிந்து தனியே
வருதற்குக் காரணமென்னை? எம்போன்ற முனிவர்
செய்த புண்ணியமோ? இவ்வுலகஞ்செய்த பாக்கியமோ

வெனக் கூறிநிற்க, முருகக்கடவுள் அம்முனிவரைநோக்கி ஐய! நமது அருமைத்தாய் தந்தையர் விருப்பத்தின்படி திருவேற்காட்டினைத் தரிசிக்கப் போகின்றேன், அத்தலத்தின் மகிமையினை நீயறிந்தவாறுசிறிது சொல்லுதி யென்றவுடன் முனிபுங்கவர் களிப்புற்றுக் காங்கேயக்கடவுளே! தேவரீ ரறியாததுமுண்டோ? அடியேனை யொருபொருட்டாக மதித்து தேவரீர் திருவிளையாட்டாகக் கேட்டமையின் அடியேனாற் கூடிய வரையில் சொல்லுகிறேன் திருச்செவி சாத்தி யருள வேண்டு மெனச்சொல்லத் தொடங்கினர்.

சண்முகப்பெருமானே! ஒருகாலத்தில் மகாப்பிரளயமுண்டாகி உலகமுழுவதுஞ் சலத்திலை மூழ்கிவிட மறுபடியும் உலகத்தினைச் சிருட்டிக்கக் கருதிப் பரமேஸ்வரனாகிய பரமசிவன் வெள்ளத்தினை வற்றச் செய்து வேதங்களைநோக்கி நீங்கள் போய் ஒருதலத்தில் மரங்களாக முளைக்கக்கடவீரென்றனர். அங்ஙனமேவேதங்கள்வேலமரமாகிமுளைத்துச்செழித்தன. அவ்வேலமரங்க ளொன்றினடியில்விண்ணவர் பெருமான் சோதிசொரூபமானவொருசிவலிங்கமாகவெழுந்தருளினர். அப்போதுஅவர்வாமபாகத்தில்அருண்மயமான அம்மையார் ஒருவடிவாகிநின்று தன்னையகனைவணங்கி ஐயனே! நான் செய்யவேண்டிய தொழிலியாதென்ன மாதே! வேதமாகிய வேலவிருட்சத்தின்கீழ் நாமின்று எழுந்தருளியதால் இத்தலத்திற்கு வேற்காடெனப் பெயர்வழங்கும். இத்தலத்திலிருந்துகொண்டு இவ்வுலகத்

தினைப் பழையபடி படைப்பாயென்றனர். அம்மையார் அங்ஙனமே செய்வேனெனச் சம்மதித்துத் தனது வலதுகண்ணில் பிரமனையும், இடதுகண்ணில் விஷ்ணுவினையும், நெற்றிக்கண்ணில் உருத்திரனையும், முகத்தில் அக்கினி, காயத்திரி பிராமணர் முதலியோரையும் தோளில் இந்திரன் க்ஷத்திரியர் முதலியோரையும், தொடையில் விசுவேதேவர் வைசியர் முதலியோரையும் தாளில் சூத்திரர் முதலிய பலரையும், பயிர்க்கள்களோடும் அநேககோடி உயிர்களையுமுண்டாக்கி அண்ணாலுக்குச் சமீபத்தி லெழுந்தருளியிருந்தனர். அங்ஙனமுண்டாய பிரமன் முதலிய பலரும் சுயஞ்சோதியாகப் பிரகாசிக்கும் சிவலிங்கப் பெருமானைப் பூசித்திருக்க, அவர்கட்கு வேதங்களை நன்கு போதித்து அவர்களை நோக்கித் தேவர்களே! முன்னொருயுகத்தில் இவ்வாலயத்தின் தெற்கில் பாலிநதிக்கரையில் தேவர்களனைவருக்கும் வேதத்தினைச் சொல்லிவைத்தோம் ஆதலால் நமக்கு அத்தியாபகேசனென வொருபெயர் வாய்ந்தது. இத்தீர்த்தக்கரையில் அநேகமான சைவமுனிபுங்கவர்கள்வந்து நீராடியதால் * தேவர்கண்டமெனப் பெயருண்டாயது. நாமெந்த வுருவெடுப்போமோ அந்தந்தக்காலத்திலதற்கேற்ற வுருவெடுக்கும்படி வேதங்கட்கு நாம் வரங்கொடுத்திருந்ததனால், திரிபுரதகன

* இம்மடுவானது ஆலயத்திற்குத்தெற்கே குத்தாமணிக்கொல்லைக்குச் சமீபத்திலுள்ள பாலிநதிக்கரைக்கு வழங்குகிறது. பூர்வத்தில் தனியேயிருந்து பின்பு நதியில் கலந்துவிட்டது.

காலத்தில் இவ்வேதங்கள் நான்கு குதிரையாயின, அருச்சுனன் பொருட்டு வேடவுருவங் கொண்டபோது நாய்களாயின, அம்பலத்தில் ஆனந்தத்தாண்டவஞ் செய்தபோது காற்சிலம்பாயின, பிட்சாடன கோலங் கொண்டகாலத்துக் கௌபீனமாயின, இக்காலத்தில் சிவலிங்கரூபமாய் விளங்க வேண்டுமாயின் இவ்வேதவனத்தில் உங்களிஷ்டப்படி பூசைசெய்யுமென்றனர்.

பிரமன் முதலிய தேவர்கள் சிவநாமம் பூசித்துச் சிருட்டி முதலிய வரங்களையடைந்து தங்களுலகம்போயடைந்தனர். கலிகாலத்திற்குப்பின் அப்சரமாதர் பலர் சிவசாயுச்சியங்கருதி உலகமாதாவாகிய உமாதேவியைப் பூசித்துச் சிவலிங்கத்தைத் தாபிக்கிறாயினர். அன்றுமுதல் இவ்விலிங்கத்திற் கற்பகப் பூமணமுண்டாயது. தேவேந்திரனொருகாலத்தில் விருத்திராசுரனைக் கொன்றதனாலுண்டாய பிரமகத்தியினை யொழித்துக்கொள்ளும் பொருட்டுத் தலங்கடோறுந் தரிசனஞ் செய்து கொண்டே வருகையில் பூர்வபுண்ணியத்தால் தெய்வத் தன்மை பொருந்திய திருவேற் காட்டினையடைந்து, வேததீர்த்தத்திற் படிந்து சோதிசொரூபமான பெருமானை வணங்கி அங்குத் தவஞ்செய்து கொண்டிருந்தமுனிவர்களால் அத்தலத்தின் மகிமை முழுவதுந்தேர்ந்து சிலகாலமீங்குத் தங்கிப் பூசித்துப்பிரமகத்தி நீங்கப்பெற்றுத் தன்னுலகடைந்தனர்.

இவையே யன்றி வேதசன்மனென்னும் பிராமண னொருவனுக்கு ஒரு புத்திரனிருந்தனன், அவன்றந்தை

யிடத்தில் கல்விபயின்று சகலாகலா வல்லவனாகிச் செருக்கடைந்து அனேகமான முனிவர்களிடஞ் சென்று அவர்களுடன் குதர்க்கஞ்செய்ய அவர்கள் அவனை அற்பவாயுளுடையவனாகக் கடவையெனச் சபித்தனர் இதனைக் கேள்விபட்ட வேதசன்மர் பயந்து வாழ்ந்து வருகையில் அச்சிறுவனொருநாள் சமித்துக்கொண்டு வரும்படி காட்டிற்குச் செல்ல அவன்மீதொரு புலி பாய்ந்து கொன்றுவிட்டது. இதனைக் கண்ணுற்ற இடையர்கள் வேதசன்மருக்குச் சொல்ல அவரோடியுஞ்சென்று புத்திரன்மேல் விழுந்து புலம்புகையில் ஓ! பிராமணரே! திருவளர்ந்தோங்கும் திருவேற்காட்டில் சென்று ஒருசிவலிங்கம் பிரதிஷ்டித்துப் பூசிப்பையேல் நினது புத்திரனுயிர்பெற் றெழுவன்" எனவொரு அசரீரி ஆகாயத்தி லுண்டாயது. கேட்ட பிராமணர் அப்புத்திரனை யெடுத்துக்கொண்டு வேதவனமடைந்து *அருட்குறி யொன்றினை யெழுந்தருளச் செய்து அருச்சனை செய்து வரலும் அவ்வருட் குறியினின்றும் அமலன் வெளிவந்து அந்தணனே! உன்புத்திரனைக் கொன்றது புலியன்று முனிவர்சாபமே புலியாக வந்தது இனி யுன் புத்திரனுடன் சுகமாக வாழக்கடவையென வழங்கி மறைந்தருளினர்.

இவை முதலிய பற்பல சரிதங்களை வியாக்கிர முனிவர் விளம்ப காங்கேயக்கடவுள் கேட்டு மகிழ்ந்து

* இவ்விலிங்கம் அயனப் பாக்கத்திலுள்ள எட்டு லிங்கத் தொன்று.

முனிவருக்கு விடைகொடுத்தனுப்பித் திருவேங்காட்டினை யடைந்து, வேத தீர்த்தத்திற் படிந்து வேதநாயகனைப் பணிந்து, அவ்வாலயத்திற்குச் சமீபத்தில் ‡ மரகத லிங்கமொன் றெழுந்தருளச்செய்து அதற்குக் காங்தனயகரெனத் திருநாமந்தரித்து, கீழ்த்திசையில் *மந்தாகினி தீர்த்தமுண்டாக்கி, மேற்றிசையில் தனது வேலாயுதத்தினால் ஒரு* கூபமெடுத்து, அதில் தேவாமிருதத்தினை நிரப்பி அத்தீர்த்தத்தினைக் கொண்டுபெருமானுக்குத் திருமஞ்சனமாட்டி, அருச்சனை புரிந்து பலமுறை பணிந்து அக்கோயிலி னொருபாங்கரிருந்து அரியயோகஞ்செய்து கொண்டிருக்கையில் சாமகண்டனாகிய சிவபெருமான் பெருங்கருணை குடிகொண்டிருக்கும் பெருமாட்டி யுடனே வெளிவந்து தமதுமகனை யருகழைத்து மடியிருத்தி யுச்சிமோந்து குழந்தாய்! நினக்கு வேண்டுவது யாதென்ன! தந்தையே இந்த லிங்கத்தில் தேவரீர் எந்நாளும வீற்றிருந்து உம்மைப் பூசிப்போர் யாவர்க்குங் கிருபை செய்தருளவேண்டும். நானெடுத்த இந்தக்கூபத்தில் ஆடினோர்கள் பிதிர் தினத்தில் தருப்பணஞ் செய்தோர்கள், பிதிர்பிண்ட நெறியினீந்தோர் இவர்கட்குபிதிர்க்களினருள் கிடைத்

---

* இவ்விலிங்கம் ஆலயத்தின் உள்பிரகாரத்தில் மேற்கே இருக்கிறது.

* இத்தீர்த்தம் ஆலய கோபுரத்திற்குச் சமீபத்தி லிருக்கிறது

இக்கிணறு ஆலயத்தின் மேற்கு மதிலுக்குப் பின்னிருக்கிறது.

கிடவேண்டுமென யாம் அமலையோ மாதுக வெனக்கூறி அம்மையையும் பரகதியளிக்குநின் பணிந்தருளினர். கந்தப்பெருமானும் கந்தகிரிக் கெழுந்தருளினர். எவராயினும் சோமவாரதினம் இங்கிஞ்ஞ நீராடி இன்பலறிய சண்முகனை வணங்கின் பஞ்சமகா பாவிகளாயினும் புண்ணியராகவே விளங்குவர்.

காங்கேயச் சருக்கம் முற்றிற்று.

---

௬ பராசரச் சருக்கம்.

சிவபுந்நாக்கிர ராஜினாகனே! விசாகப்பெருமானுக்குத் தேவசேனாதிபதிபட்டஞ் சூட்டுகையில், நந்தினியென்னும் பசுவானது கறந்த பாலினைத் தேவர்கள் அபிடேகஞ்செய்ய வப்பால் அந்நதியின் மலையினின்றுஓடிவந்து, பாலாறெனப்பெயர்வாய்ந்து, கடவுளர் தொழுங் கங்கை நதிக்கிணையாகி, தன்னிடத்து மூழ்கினார் யாருக்கும் தண்ணருள் பாலிக்கும் தன்மையுடையதாகி விளங்கியது. இப்புண்ணிய நதி தீரத்தில், அனேகாயிரமான தலங்களிருக்கினும், அவற்றுளொரு உத்தமத் தலத்தினைப்பற்றிச் சொல்லுவேன் கேட்பீராக. ஒருகாலத்தில் அத்திரி, பிருகு, குச்சன் ஆங்கிரன், வசிட்டன், கௌதமன், காசிபன், என்னு மேழு முனிவர்களுட இயமமலைபி னுச்சியிலிருந்து தவஞ் செய்து கொண்டிருக்கையில் அவர்முன் னிலையிலொரான்

முகக்கடவுள்தோன்றி, நீங்கள் தவஞ்செய்வதற்கு கார
ணம் யாது? என்ன வரம் வேண்டும்? கேட்பீராகவென,
முனிவர்கள்வணங்கி ஐயா! இனிச்சென்மமெடாத வகை
யான வரம் வேண்டுமென்ன பங்கயன்குறுநகைசெய்
துபெரியோரே! யானைமுதல் எறும்பீறாகச் சொல்லப
பட்ட உயிர்யாவும் புண்ணியத்தினை யடையவேண்டுமா
யின் தருமமியற்றவேண்டும். அத்தருமம் இருவகைப்பட்டி
ருக்கும் அது பசுதருமமெனவும் பதிதருமமெனவும்
சொல்லப்படும். பசுதருமமாவது விரதமபூணல், யா
கஞ்செய்தல், குளம்வெட்டல், தண்ணீர்ப்பந்தல் வைத்
தல், அன்னதானஞ்செய்தல் முதலியவாம். பதிதரும
மாவது ஒரு செங்கல்லும் எள்ளளவு சுண்ணமுமெடு
த்து ஒரு சிவாலயத்தில் பணிசெய்ய நினைத்தல் முத
லிய பல திருப்பணிகள் செய்தல், சிவார்ச்சனை செய்
தல், சிவலிங்கந்தாபித்தல், திருவிழாச்செய்தல் முதலி
யனவாம். இதனிலுங் கோடியதிகமானது சிவனடி
யார்கட்கு மடங்கட்டிக்கொடுத்து அவர்களை யுபசரித்
தல், அதனிலுங்கோடியதிகமானது சிவத்தலங்களில்
அடியார்கட்கு ஆடைமுதலிய வளித்தல், இவை யெ
ல்லாவற்றினு முயர்ந்தது திருவேற்காட்டினில் அடியா
ர்கட்கு அன்னமளித்தல் தெய்வநாயகனுக்குத் திரு
விழாச்செய்தல் இதனிலுஞ் சிறந்த தருமங் கிடையாது.
ஆகலின் இத்தகைய அருமையான தலத்தில் நீவிர்
சென்று உங்கட்கிஷ்டமான சித்தியை யடையலாமென்
றனன். உடனே அவ்வாறு முனிவர்களும் பிரமனிட

அதில் விடைபெற்றுத் திருவேற் காட்டினையடைந்துபஞ்
சாக்கினி தீர்த்தத்திற் படிந்து வேதநாதன் றிருவடி
யைத் தொழுது பாலிநதிக்கரையில் தங்கள் பெயரால்
சிவலிங்கந் தாபித்து வணங்கிவருங்காலையில், வள்ளொ
கிய மங்கைபாகன் பிரத்தியட்சமாகி முனிவர்களே !
வைவச்சுதமனுவந்தரம் வரையில்நீங்கள் தேவபூமியில்
முனிவர்களாயிருந்து,பின்னர் மோக்ஷகதியடையக்கட
வீரெனக் கட்டளையிட்டுக்கரந்தருளினர் அங்ஙனமேயவ
ர்களுஞ் சிவபெருமான் றிருவருளிற் றிளைத்துய்ந்தனர்.

பின்னொரு காலத்தில், பிரமாவினுடைய மான
சபுத்திரனுன வசிஷ்டருடன் விசுவாமித்திரர் விரோ
தித்து அவ்வசிஷ்டரால் பலதரம் அவமானமுற்று
அதைத்தீர்த்துக் கொள்வானெண்ணிக் கொண்டிருக்
கையில், அயோத்தி மன்னனுகிய சவுதாசனென்னு மர
சன் ஒருவனத்தில் வேட்டையாடிக் கொண்டிருக்கை
யில் இரண்டு அரக்கர்கள் வந்தெதிர்த்தனர். அவ
ர்களில் மூத்தவனைக் கொன்றுவிட இளையவன் மானி
டவேடந்தாங்கி அரசன்முன்வந்து நின்று ஐயா! நான்
அன்னஞ்சமைப்பதில் அளவிலாக் கீர்த்தியுள்ளவனெ
ன்றனன். வேந்தன் அவன் வஞ்சகத்தினைத் தெரிந்து
கொள்ளாதவனுகி அவனை யழைத்துக்கொண் டயோ
த்திக்குவந்து தன்னிடத்திற் சமையற்காரனு யமைத்
துக்கொண்டனன். அரசன் வீட்டில் ஒரு நாள் பிதி
ர்த்தினம் வரலும் அவ்வரசன் வசிஷ்டரை யழைப்
பித்து விருந்துசெய்வித்தனன். அப்போது வஞ்சகனு

டந்தாங்கி வந்திருக்குஞ் சமையற்காரன் நரமாமிசத்
தினைச் சமையல்செய்து முனிவனுக்குப் படைத்தனனா
அதனை யுண்டமுனிவன் கோபங்கொண்டு உண்மை
யினை விசாரியாமலே அரசனை அரக்கனாக வாகும்படி
சபித்தனர். அச்சாபத்தினையேற்ற வரசன் இராக்கத
னாகி வனங்களிற் றிரிந்துகொண்டிருக்கையில் விசுவா
மித்திரர்கண்டு நிருதனே! நீ சென்று எனதுவிரோதி
யாகிய வசிட்டன் யாகத்தினையழித்து வருவாயென
லும் அவ்வசுரன் அக்கணமேயடைந்து அவ்யாகசாலை
யிலிருந்த வசிஷ்டர் புத்திரர்கள் நூறுபேர்களையு மெ
டுத்து விழுங்கிவிட்டனன். வசிஷ்டர் கண்டு அக்கினி
யிற்பட்ட புழுப்போற்றுடித்து ஒன்றுந்தோன்றாதவ
ராகி உயிரைநீக்கிக் கொள்ளக் கருதிச் சுவணமலை
மீதேறிக் கீழே விழுந்தனர். அப்போது முனிவருக்
குத் துன்பம் வாராதபடி பூமிதேவிதாங்கிக் கீழேவிட்
டனள். இனியென்ன செய்வதென வசிஷ்டர்புலம்பந்
தனதுபுத்திரர் மனைவிமார்களுந் துக்கிக்க, மூத்த புத்
திரனாகிய சத்தியின் மனைவியைநோக்கி அம்ம! வயிற்றி
லடித்துக் கொள்ளாதே நின்வயிற்றிலுள் கருப்பஞ்
சின்னமாய் விடுமென முனிவர் தேறுதல் சொல்லிக்
கொண்டிருக்கையில், அவள் வயிற்றிலிருந்து ஒரு பெ
ருங்குரலினைக்கேட்டு யாருங்கலங்கிக்கொண் டிருக்கும்
போது, நாராயணமூர்த்தி பிரத்தியட்சமாகி வசிஷ்
டரே! அக்குரல் உனது மகன் சத்தியென்பவன் மனை
வியின் வயிற்றிலுள்ளபுத்திரனுடையது, அவன்கருணை

நீதியாகிய கண்ணுதற்பெருமானிடத்தில் மிகுந்த அன்பனாய் எனக்குச் சமானமானவனாக விளங்குவனெனச் சொல்லி விண்ணேகினர். சிலநாளிற்கெல்லாம வசிஷ்டனுக்குப் பௌத்திரன் பிறந்தனன். அக்காலத்தில் அசுரருரி ரத்தமழை பொழிந்தது அக்குழந்தைக்குச் சாதகருமமுதலிய முடித்துப் பராசரனென்ப பெயர்வைத்து வளர்த்து வந்தனர். ஒருநாள் அச்சிறுவன் தாய்மடியிலிருக்கையில் அவள் முகத்தினைநோக்கி அம்ம! நீ மாங்கலிய மிழந்திருப்பதற்குக் காரணமியாதெனக்கேட்டு, நடந்த விருத்தாந்தத்தையெல்லாமுணர்ந்து முனிந்து இவ்வுலகத்தினை யிப்போதே யெரித்துவிடுவேனென வசிஷ்டர்கண்டு அப்பா குழந்தாய்! அசுரர் கொடுமைக்கு உலகமென்னசெய்யும். நீ, திவ்வியதேஜோரூபமாய்ச் சிவபெருமான திருக்கோயில் கொண்டிருக்கும் திருவேற்காட்டினை யடைவாயாக. அத்தலத்தில் நானும் எனைப்போன்ற பல முனிவர்களும் தவமியற்றிப் பலசித்திகளை யடைந்தோம். சித்தர், கின்னரர், இயக்கர், தேவர்பலர் அத்தலத்தினைவிட்டு என்றும்பிரியாது வாழ்வரென்றனர். கேட்டபராசரர் அக்கணமே தன்பாட்டனாரிடம் விடைபெற்றுத் திருவேற்காட்டினையடைந்து வேலாயுததீர்த்தத்தில்படிந்து காந்தநாயகனைப்பூசித்து அதற்குவடபாலில் தன்பெயரால் * பராசரலிங்கமொன்றுபிரதிஷ்[illegible]

---

* இவ்விலிங்கம் ஆலயத்தின் வெளிப்பிரகாரத்தில் வ[illegible] இருக்கிறது.

"ஆரணமுடிவாய்நின்ற ஐயனே சரணந்தூய
பேருணர்வாகி நீடும் பிஞ்ஞகா சரணநால்வாய்
வாரணவுரிவைபோர்த்து மன்னுயிர்க்குயிராய் வாழும்
பூரணசரணமெந்தாய் புண்ணியசரணமாமால்"

எனத்தோத் திரித்துநிற்க, காமதகனனான கண்ணுதல் கண்முன்வந்து முனிவ! நீயொரு ஆக்கதயாகமொன்று வளர்த்து நினது எண்ணத்தினைப் பூர்த்தி செய்து கொள்ளக் கடவாய். உனது தந்தை தன் தம்பிமாருடன் எனைச் சூழ்ந்திருத்தலை நோக்குவாய்; அவர்யாரும் நன்முத்தியடைந்தனர். நீயுண்டாக்கிய இவ்விலிங்கத்தினைப் பூசிப்போர் எக்காலத்தினும் பகையின்றி வாழக்கடவரெனக் கூறி யெழுந்தருளினர். பராசரர் அங்ஙனமேயாகம்வளர்த்தி அசுரரனைவரையு நாசஞ்செய்து தனது விரதத்தினை முடித்து ஆனந்தங் கொண்டு தன்னிருப்பிடஞ் சேர்ந்து சிவபக்த சிரோமணியாய் வாழ்ந்துவந்தனர்.

பராசரச்சருக்க முற்றிற்று.

திருவாழிச்சருக்கம்.

தவளநீறணிந்த தண்ணளியுடையோரே! பூருவகாலந்தன்னில் புஜபலபராக்கிரம சாலியாய் வாழ்ந்த வொருவ அரசனிமித்தமாக விண்டுவானவர் கருடனின் மேலேறி வந்து அனேகமாயிரமான அம்புகளைச் சைவ

முனிவராகியதகிசியின்மீதி லேவுதலும்அவையனைத்து மம்முனிவர் மீதிற்பட்டுத் தூசாயினவுடன் அதிககோ பமூண்டு, அனேகமாயிரமான அசுரர்களை அரைநொடியில் அதஞ்செய்யத்தக்கக் கோடிசூரியப பிரகாச மான தனது சக்கராயுதத்தினை முனிவர்மீது ஏவினர் அது முனிவர் திருமேனியிற் பட்டுக் கூர்மழுங்கிக் குப்புறக்கீழேவிழுந்தது. இதைக் கண்ணுற்ற நாரணன் மிக்க விசனமடைந்து யுத்தக்களத்தி னின்றுந் திரும்பி பாசறையிற்சார்ந்து இரவும்பகலுந் துக்கமுற்றுச் சமீபத்திலிருந்த தேவர்களை நோக்கி ஐயன்மீர்! இது காறு மென்னிடத்தி லிருந்த சக்கர மொழிந்தது. கொம்பில்லா மாடுபோலாயினேன். இனிவேறொரு சக்கரம் அடைவதற்கு ஒரு சூழ்ச்சி தோன்றுகிறது. அஃதென்னவெனில்? முந்தியொருகாலத்தில் சலந்தராசூரன் பொருட்டு உண்டாக்கி அவனை யழித்த சுதரிசன மென்னுஞ் சச்கரமொன்று, அகண்ட சச்சிதானந்த கனிபூதனாகிய நமது ஆண்டவன் சிவபெருமானிடத் திருக்கிறது. நானவரைப் பூசித்தாவணங்கின் கருணைசாலியாகிய கண்ணுதல் கருணைசெய் தளிப்பர், அப்பெருமானை யேத்தியன்றோ அனேகர் தாங்கள் விரும்பிய வரங்களையெல்லாம் பெற்றார். நான் வைகுண்டம்பெற்று வாழ்வதும் அவர் கடைக்கணிப்பாலன்றோ. அப்பெருமானிச்சையின்றி யொரு அணுவுமசையாது. என்போன்றார்கட்குச் சிறிதஞ்சுதந்திரமில்லை. நானிவ்வுலகத்தினைக் காத்துவருதலும் அவு

ரனுக்கிரகத்தினல் அல்லவோ? அவர்பால்சென்று நம் மெண்ணத்தினைப் பூர்த்திசெய்துகொள்ளலாம், அதற் குறியதலம் அகிலலோகபூஷணமாய் விளங்குந் திரு வேற்காடேயாம். வம்மின் நாமெல்லோருஞ் செல் வோமெனயாவரையு மழைத்துக்கொண்டு வேதவன மடைந்து, தான் பன்றியாய்ப் பலயுகந் தேடியுங் காணாத பவளமால்வரை போன்ற வெம்பாளை முனி வர்கள் ஓராயிரஞ் சதுர்யுகம் பூசித்த வத்தபளைத் தரி சித்துப் பரவசமடைந்து உருத்திராக்கமாலை பூண்டு, கரியமலைமீது வெண்மையானமேகம் படிந்ததுபோல் தன்மேனி முழுவதும் விபூதி தூளனஞ்செய்து கொ ண்டு வாயுதிசையில் *சிவலிங்கம் தாபித்துத்தேவர்கள் சமீபத்திலிருந்து வேண்டிய வுபகரணங்களை எடுத்துக் கொடுக்கச் சோட சோபசாரத்துடன், சிவசகஸ் திர மந்திரமுச்சரித்துப் பூசித்துப் பின் வேதநாயக னுகிய சிவலிங்கப்பெருமான் றிருவடியில் ஆயிரந் தாம ரை மலர்களைக்கொண்டு மலரொன்றினுக்கு மந்திர மொன்றுசொல்லி யருச்சனை செய்து வருகையில் சிவ பெருமான் அவ்விண்டுவின் அன்பினை யாவருக்குந் தெரிவிக்கும் பொருட்டு அவ்வாயிரமலரிலொன்றினை மறைக்க,வொரு மந்திரத்திற்கு ஒரு புட்பங்காணுதலா னுகியுடனே தாமரை மலரைப்போன்ற தன் கண் ணென்றினைப்பிடுங்கி யருச்சனை புரிந்தவுடன், உமாச காயன் வெளிவர விண்டுமூர்த்தி தன்னைமறந்து கூத்

* இச்சிவலிங்கம் கண்ணபாளையத்தி லிருக்கிறது.

நாடிக் கீழேபலதரம் வீழ்ந்தெழுந்து நெஞ்சுருகி நின்றுவணங்கி.

"போக்குவர விரண்டுமில்லாப் பூரணகாரண சரணம் புவனமெல்லா,யாக்கியளித்தழித் தடைவிலொடுக்கியருள் புரிந்தகலா வமைதிதன்னை, நோக்கி யொடுங்கிய உலகந்தன்னை மீளப்படைத்தனுக்க ணுகர்ச்சியாவுந், தாக்கியவற்றினுக் கியன்றதனு கரணமளிக்கு மெந்தாய் சரணமாமால்."

எனத் தோத்தரித்து எந்தையே! இன்று என் கண்ணினைத் தேவரீர் சரணத்தில் அருச்சனை செய்ததனால் இன்றுமுதல் அடியேனுக்குக் கண்ணன் என்னும் பெயர்வழங்கி வருவதாக. இத்தலத்தினைக் கண்ணபாளையமென யாருமழைக்கக் கடவர்எனக்கேட்டுக்கொள்ள அங்ஙனமே யாகுகவெனக் கருணை செய்து, அருமையான சக்கரமளித்து அந்தர்த்தான மாயினர். அவ்விண்டுவுடன் வந்தவர்களுள் ஆதிசேடன் திருவேற் காட்டினடந்த மகிமைகளைக் கண்டு வியப்படைந்து தனது குலமாகிய பாம்புகள் இத்தலத்திலொருவரையுங் கடிக்கப்படாதென்றும் ஒருக்கால் யாவராகிலு மிதிக்க அத்துன்பஞ் சகியாது கடித்தாலும் விஷமேறக் கூடாதென்றுங் கூறி விண்டுவுட னேகினான். இவ்விண்டு பூசித்த லிங்கத்தினை வணங்கும்பொருட்டு இத்தலத்திலொருதினந்தங்கினபேர் அவர்பலசென்மங்களிற்செய்த பாவமனைத்துமொழியப்பெறுவர்.

திருவாழிச்சருக்கமுற்றிற்று.

௫ அகத்தியச்சருக்கம்.

சிவபக்த சிரோமணிகளே ! பிரமபுத்திரராகிய நாரதமுனிவரொருநாள் இமயமலையினிடத்துஎல்லாம் வல்லவெமதுசிவபெருமான் றிருமணவைபவத்தினைத் தரிசிக்கும் பொருட்டு ஆகாயவழியே செல்லுகையில் விந்தகிரியானதொரு மானிடவடிவங்கொண் டெதிர் வந்து வணங்கி யுபசாரஞ் செய்ய, முனிவர் மலையினை நோக்கி, விந்தையே! தேவர்கள் பலருமுன்னை யிகழ்ந் துரைக்க வென்மனம் புழுங்குகின்றது. நீயெனக்குப் பலவகையாக வுபசாரஞ் செய்தமையின், அதை யுனக் கிடத்திற் சொல்லாமற்போக மனமில்லை அதாவது பசுபதியாகிய பரமேச்சுரன் பாதேவருடன் தன் னிடத்திலிருந்து கொண்டிருத்தலினாலும், சூரியசந் திரர்முதலிய கிரகங்கள் தன்னைச் சூழ்ந்து வருதலி னாலும், தனக்குமேலுயரமான மலையொன்று மில்லை யெனப்பொன்மலையானது இறுமாப்படைந்திருக்கிறது. தேவர்கள் பலரு மதனையே புகழ்கின்றார்கள். இதற் கேற்ற பரிகாரத்தினை நீதேடிக்கொள்வாயெனக்கூறித் தன்வழியே யேகினர். இதைக்கேட்ட விந்தியமலை பொன்மலைமீது பொறாமை கொண்டு ஆகாயமுகட்டு வரையிலுயர்ந்து சூரியசந்திரர்கள் விண்ணிற் சஞ்சரி க்கவொட்டாதபடி தடுத்துநின்றது. இதனாலுலகத் திற் பகலிரவில்லாமற் போகவும், எக்காரியங்களு நிக ழ்தற் கேலாமற் போய் விட்டது. இதனைக்கண்ட தேவர்கள் இந்திரனிடம் போய் முறையிட அவர்

பிரமாவிடத்திற் சென்று கூற, அவர் ஆலோசித்து உடனே கண்ணுதலொருந்தருளியிருக்குங் காசித்தலத்திற்குச்சென்று, அருந்தவமுனியாகிய அகத்தியரைக் கண்டு, தபோதனரே! நீருடனே தென்றிசையைநாடி விந்தியமலையின் செருக்கினை யடக்கிவரக் கடவாயென்ன, முனிவர், நான்முகத்தேவே! முத்திக்கேதுவாகிய இக்காசித்தலத்தினை யெங்ஙனம் பிரிவேன்? விசுவேசர்தரிசனமின்றி யெங்ஙனமுய்வேன்? எனச் சொல்லித் துன்பமுற, பிரமன், குறுமுனியே! அஞ்சற்க! இப்போது நீசெய்யப்போகுங் காரியம் விண்ணுலகத்தினுக்கும், மண்ணுலகத்தினுக்கு முபகாரமாகும். அன்றியுந் தென்றேயத்தில் வடமறைக்காடென்னுந் திருவேற்காடுண்டு. அது இக்காசியினுமேம்பட்டது. அங்கெழுந்தருளியிருக்கு நிகமேசப் பெருமானிடத்து, தேனினுமிக்கத் தித்திப்பாகிய தமிழருமையினையுந் தெரிந்து கொள்ளலாமெனச் சொன்னவுடன், அகத்தியரானந்தங்கொண்டு பிரமனிடத்து விடையேற்றுத் தென்றிசைநோக்கி வரக்கண்ட விந்தியமலை ஓ! ஓ! இம்முனிவரொருகடலை யேப்பமிட்டவரெனப் பயந்து தன்வடிவத்தினைக் குறுகிக்கொண்டு எதிரிலிருந்து பலமுகமன்கூற, முனிவர் ஏ மலையே! நான் தேவதாகருமஞ் செய்யும் பொருட்டுத் தென்றேயம் போகிறேன் திரும்பிவருமளவும் நீ யிங்ஙனமே யிருக்கக் கடவையெனத் தனது உள்ளங்கையினை அதன் முடிமேல் வைத்துப் பாதாளம்

வரையி லெழுந்திவிட்டுத் திருவேற்காட்டினையடைந்து, மந்தாகினி தீர்த்தம் படிந்து, விபூதி உருத்திராக்கம் பூண்டு, பிதிர்த்தருப்பணஞ் செய்து வேலமரத்தடியி லிருக்கும் விமலனைப்பணிந்து; ஈசானதிசையில் தன் பெயரால் * அகத்தியலிங்கம் பிரதிஷ்டித்துப்பின்னர் வேதநாயகனைநோக்கி,

"அய்யிருபுயத்தபோற்றி யாறணிசடிலபோற்றி
நெய்தவழ்கருமென்கூந்த னேரிழைபாகபோற்றி
மொய்புலனடக்கிநீங்கா மும்மலங்கடந்தோர்க்கென்றுஞ்
செய்யபங்கயத்தாணல்குஞ் செல்வனேபோற்றிபோற்றி."

எனத் துதித்தமாத்திரத்து, உமாமகேச்சுரன் மூர்த்தியாய் முன்னெழுந்தருள, அகத்தியர் சாஷ்டாங்கமாகப் பணிந்தெழுந்து அரகரசங்கரசதாசிவா! எனது குலத்தில் பிறந்தவர் யாரும் சிவசம்போ என்னு மொழியினை நிமிடமேனு மறவாதிருத்தல் வேண்டும், விபூதி உருத்திராக்கத்தினை யெக்காலத்துந் தேகத்தினைவிட்டு நீங்காதபடி தரித்திருக்கவேண்டும். சிவபெருமானை நினையாதபுத்திரன் எனதுகுலத்திற்பிறவாதிருக்கவேண்டும். ஒருக்கால் பிறந்துவிட்டால் உடனே யிறக்கவேண்டும், அன்றியே தென்றேயத்தில் நிலைத்துள்ள தமிழ் மொழியினை நான் மேலுமேலும் வளர்த்தல் வேண்டும். வடமொழிவேதம்போலத் தென்மொழிவேதமும்நிலைபெறவேண்டும், தமிழில் மந்தி

* இவ்விலிங்கம் அயனம் பாக்கத்திலுள்ள எட்டுலிங்கங்களி லொன்று.

சம் செபிப்போர்க்கெல்லாந் தண்ணருள் சுரக்கவேண்டுமென வேண்டிக்கொண்ட மாத்திரத்து அங்ஙனமே யாகுகவெனவருளிச்செய்தக் கர்த்தனாராயினர்.

அந்நகலத்து அகத்தியமுனிவர் அழகிய திருவேற்காட்டி லமர்ந்திருக்கையில், இமயமலையினிடத்தே எல்லாம் வல்லபரசிவபிரபுவிற்குத் திருமணமகோற்சவமெனத் தேவர்களும், முனிவர்களும் செல்வதனைக் கேள்விபுற்றுத் தானுமங்குப்போய்ச் சேர்ந்தனர். உலகத்தினிடத்துள்ள அனைவருமேககாலத்தில் இமயமலைச்சாரலை யடைந்தவுடன் வடதிசை தாழ்ந்து தென்றிசையுயரத் தேவர்கள் கண்டு பயந்து திரியம்பகனாகிய சிவபெருமானிடத்து முறையிடச் சுவாமி கருணைகூர்ந்து, சிவராஜயோகச் செல்வராகிய அகத்தியமுனிவரை யழைத்து, முனிவரே! உலகங் கீழ்மேலாகிறது இது சமமாக வேண்டுமாயின் நானே தென்றிசைக்குப் போதல் வேண்டும். எனக்குச் சமானமானவன் நீயன்றி வேறில்லை. நீயிப்போதே பொதியமலைக்குச்சென்று பூமியினைச் சமமாக்கக் கடவாயென்றனர். அகத்தியர்கேட்டு அதிக வியாகூலமடைந்து, அப்பனே! இத்தனைக் கோடானுகோடி உயிர்கள் தேவரீர் திருக்கல்யாண சுந்தரத்தினைத் தரிசித்து, ஆனந்தங்கொள்ள பாவியாகிய நானொருவன்மாத்திரம் காணாதிருக்கும்படி நேரிடவேண்டுமோவென்ன, சுவாமி! முனிவனைப்பார்த்து அன்ப! வியசனப்படவேண்டாம் உனக்கு மிகப்பிரியமாகிய திருவேற்காட்டில் உமக்கு

நமது திருக்கல்யாணக்கோலத் தரிசனங்காட்டி அக்
கோலத்துடன் அத்தலத்தி லெந்நாளுமெழுந்தருளி
பங்குனிமாதந்தோறும் திருக்கல்யாண மகோர்ச்சவங்
கொண்டருளுவோமென்றனர். கேட்ட கும்பமுனிவர்
ஆனந்தங்கொண்டு விடைபெற்றுப் பொதிகைமலையை
யடைந்து பூமியைச் சமமாகநிறுத்தினர். பின்னர் திரி
நேத்திரதாரியாகிய சுவாமியானவர் இமயமலையினிட
த்து அலங்கரித்துள்ள ஒருமணவரையிலிட்டிருந்த இந்
திரநீலபீடிகைக்குச் சமீபித்தவுடன், மேனைபால் கொ
ணர்ந்து திருவடியினை யலம்பித்துடைத்து அருச்சனை
செய்தவுடன் பீடத்தின்மீது எழுந்தருளியிருந்தனர்.
பிரமாதிதேவர்கள் தங்கள் தங்களுக்குரிய ஆசனத்தி
லிருந்தனர், அச்சமயத்தில் அகிலலோகங்கட்குந்தா
யாகிய பார்வதியம்மையாருக்கு மஞ்சனநீராட்டி ஈரம்
போக்கி, கூந்தற்கோதி, மலரணிந்து, பட்டாடையுடு
த்தி, கண்ணிற் கஞ்சனந்தீட்டி, காதிற்றோடுசேர்த்து,
சுட்டிக்கட்டி, பற்பலகலன்களைத்தரித்து, இலட்சுமி
பக்கத்திலடைப்ப மேந்த, அரம்பை சாமரையிரட்ட,
சத்தகன்னியர் சிவிகைதாங்க, மணப்பந்தரி லெழுந்
தருளச்செய்து சுவாமிக்குச் சமீபத்தி லுட்காரச்செய்
தனர். மேனை சாந்தம், தூபம், மஞ்சனம், மலர்கொ
ணர்ந்து பெருமான் றிருவடியினை விளக்கிப் போற்றி
யருச்சனைபுரிந்து ஒருபுறநிற்க, சதுர்முகன் சடங்கினைக்
கிரமப்படி நிறைவேற்ற, பலவாத்தியமுழங்க, மாதர்
நடனஞ்செய்ய, மங்கள மெங்கணுமுழங்க, பார்வதி

யார் திருக்கரத்தினைப் பரபசிவன் றிருக்கரத்திற்சேர்த்து, இப்பெண் மணியினைத் தேவரீருக்கு அளித்தனமென மலையமன்னன் சொல்லினர். அப்போது அமரர் மலர்மாரி பொழிந்தனர். அர! அரவென யாருமாரவாரித்தனர். உடனே சிவபெருமான் தேவியுடனே இடபவாகனமேறிப்பிரமாதியர்சூழ, வேதபாராயணம் விம்ம, பல்லாண்டு பலர்பாட, திருவேற்காட்டில் வந்திறங்கி கல்யாணசுந்தரராய் விளங்கினர், தேவமாதர் தட்டினையேந்தி ஆலாத்தி சுழற்றினர். விண்ணவர்கள் ஆரவாரித்தனர் அக்கணமே பொதியமலையினின்றும் அகத்தியர்வந்து வணங்கித் தரிசித்து ஆடிப்பாடிப் பலவாறு தோத்தரித்து இக்கோலத்துடனே எந்நாளும் இத்தலத்திலே எழுந்தருளி யிருக்கும்படி வேண்டிக்கொண்டு விடைபெற்றுப பொதியமலைக்குச் சென்றுபிரதிதினம் வந்து ஒருமுகூர்த்தநேரந் தங்கிப் போய்க் கொண்டிருக்கின்றனர்.

அகத்தியச்சருக்கமுற்றிற்று.

பரசுராமச்சருக்கம்.

சிவஞானத்தபோதனர்களே! பிரபலவைதிகசிகாமணியாகிய பிருகுமுனிவர் கொடுத்த சாபத்தினால் விண்டுமூர்த்தி யானவர் செமதக்கினிக்கும் அவர்மனைவிஇரேணுகைக்கும்புத்திரனாகப்பிறந்த பரசுராமர்ஒருகாலத்தில் அவர்தந்தையின் கட்டளையின்படி தாயின்

றலைபினை யறுத்துத்தள்ளி வாழ்ந்து வருகையில், செம தக்கினி காட்டிற்குச்சென்று தவஞ்செய்ய அவர் தலையைக் கார்த்தவீரியார்ச்சுனன் அறுத்தெறிந்தனன். இதனைக் கேள்வியுற்ற பரசுராமர் கோபங்கொண்டு அரசர் குலங்களையெல்லா நாசஞ்செய்யவேண்டுமெனக்கருதி புகழோங்கிய * பூதேஸ்வரத்தலத்திற்கு ஈசானதிசையில் தெய்வமணங்கமழு நந்தவனஞ்சூழ்ந்த திருவேற்காட்டினையடைந்து, மந்தாகினி தீர்த்தத்தில் மூழ்கி, விபூதி உருத்திராக்ஷம் பூண்டு, வேலமரத்து மூலத்திலெழுந்தருளும் விமலனாகிய சிவபெருமானை வணங்கி கிழக்குத்திசையில் வாவியொன்றெடுத்து, மேற்றிசையிற் கோயிலொன்றுண்டாக்கி அதில் தன் பெயரால் ஒரு சிவலிங்கந்தாபித்து மலரிட்டருச்சனை புரிந்து பல நாள் தவஞ்செய்துகொண்டிருந்தனர். ஒருநாள்காலையிலெழுந்துநித்தியகடன்களை முடித்துக்கொண்டு,பாலிநதிக்கரையில் சந்தியாவந்தனஞ்செய்துகொண்டிருக்கையில், திருவேற்காட்டுநாதர் மனைவியுடனும், புத்திரர்களுடனும் பஞ்சமர் வேடந்தாங்கி மாமிசத்தினையேந்திக்கொண்டு குறுந்தடிபிடித்துச் சமீபத்தில் வந்தனர். தவசிகண்டு கைச்சாடையா லப்புறத்தே யொதுங்கிப் போம்படி சாடைகாட்டினர். அச்சாடையினைத் தெரிந்துகொள்ளாதவர்போலச்சுவாமி சமீபத்தில்வந்துவிட்டனர்.மாமிசத்தினைத்தின்னும் அடபாவி! பாவி!கிட்டவாராதே! வாராதேயென்றுபரசுராமர்சொ

* பூவிருந்தவல்லிக்கு வேறொருபெயர் பூதஸ்வரம்.

ல்லிக்கொண் டிருக்கையில், நாய்கள் மேலேவந்து வீழ்ந்து கடிக்கவாரம்பித்தன, இரண்டு பஞ்சமப்பிள்ளைகளும் இரண்டுகரங்களைப் பிடித்துக்கொள்ள நெருங்கினர். அப்போது அம்மையார், நீயார்? சந்நியாசியா? வைதிகனா? சாற்றுமென்றனர். நான்யாவனாயினுமாகுக, நீங்களென்னைத்தீண்ட வேண்டாம், தோஷம் வருமென்று பரசுராமன் சொன்னவுடன் தோடமுனைக்கா? எங்கட்காவரும், நீபிராமணனா? வேறுசாதியா? உன்னைப்பார்த்தால் எங்கள் குலத்தவனைப்போற் காணப்படுகிறாயென்று சுவாமி சொன்னவுடன், ஏபஞ்சமரே! நான் சமதக்கினிமுனிவர்புத்திரன் அத்தகைய என்னை யுங்கள் குலமென்ன விறுபாப்புடன் பேசுகிறாயெனப் பரசுராமன் கூற, அடாதவசீ! செமதக்கினி மகனெனச் சொன்னதினாலேயே எனக்குச் சுற்றத்தானாகிவிட்டாய், உன் தாய் இரேணுகை என்மனைவியிடத்தி லதிகப்பிரியமாக விருந்தவளென்று சுவாமி சொல்லவும், பரசுராமன்கேட்டு மனங்கொதித்து அடா சண்டாளா! நீ யென்னசொன்னாய் நின்னாவை யறுப்பேனென்றனர். அப்போது சுவாமி இராமனைநோக்கி நீ தாயைக்கொன்றவன், சுற்றத்தாரைத் தூஷித்தவனை யுடனே தண்டிக்கவேண்டும். என்னை வைத யுன்னைச் சிவனே தண்டிப்பன் என்றுகூறி நாய்களை யுசுவேற்றி ஓட்டினனொழிய அதனைத் தண்டினா லிராமன் றடுத்துக்கொண்டு சுவாமியினையும் புத்திரர்களையும் நன்றாகப் புடைத்தனர். சுவாமிக்குக கோபமிகுந்து நாய்களைக்

கடிக்கச்செய்து பின்னாகளைவிட்டு இரண்டுகரங்களையும் பிடிக்கச்செய்தவுடன் கோபமுண்டாக இருவரு மல்லயுத்தஞ்செய்ய வாரம்பித்து ஒருத்தொருவர் தூக்கி மேலேயெறிந்து, மற்றவரையொருவர் மோதியடித்துக் கொண்டிருக்கையில், அம்மையார் சுவாமியைப் பார்த்துக் கண்ணாடைகாட்டிக் கோபஞ்செய்ய வேண்டாம் பரசுராமனுக்கா ரிறந்துவிட நேரிடுமென்று குறிப்பிக்க, ஸ்வாமி மெல்லமெல்லப்புரட்டி மெதுவாயடிக்க முனிவன் பயந்து நாமின்று இவனை விறந்து விடுவோமென வெண்ணிச் சுவாமியின் மார்பிலோங்கி யொருகுத்துவிட்டனர். சுவாமி கோபித்துக் கொண்டவர்போ லடித்து அவனைப் பிடித்துச் சிறிது பிசைந்து உருண்டையாக்கிக் காலாற்றாக்கி யாகாயத்திலெறிந்தனர். பரசுராமர் நெடுந்தூரஞ்சென்று பூமியில்விழச் சிறுவரிருவருங் கைகொட்டிச் சிரித்தனர். நாய்கள் மேலேவீழ்ந்து கவ்வின. மூர்ச்சையாகவீழ்ந்த அவர் முகத்தில் தென்றற்காற்று வீசியவுடன் சிறிது தெளிந்து மனதிலிந்தப்பிரகார மெண்ணுவாராயினர். அந்தோ ! என்ன அல்லலுற்றேன். என்ன அவமானமடைந்தேன். உயர் குலத்திற் பிறந்தேன். நல்லநெறியினை யனுட்டித்தேன். தந்தையிடம் வேதங்களையெல்லா முணர்ந்தேன். உலகமேசத் தாயைக்கொன்றேன். தவஞ்செய்துகொண்டிருந்த என்றந்தையை யொருவன் கொல்லப் பார்த்திருந்தேன். இப்போது இப்பஞ்சமனு லடியுண்டு மூர்ச்சையடைந்

தேன். இத்தகையவெனக்கு உயிர் நீங்குகாலம் வா
வில்லையே. என் சென்மமு மொருசென்மமோ! சிவ
னைச் சிந்திப்பவருக்கு இத்தகைய அபாயமவரலாமோ
அடியார்கட்குத் துன்பம் வராதென்று சொல்வது
பொய்த்துப் போச்சோ? பிறவித்துன்பத்தினை யொ
ழித்தலால் உருத்திரனெனவும், சுகத்தினை யுண்டாக்
குதலாற்சம்புவெனவும், நன்மையைச்செய்தலாற்சங்க
ரனெனவும் பெயர்வாய்ந் திருக்கின்றமை இப்பாவியி
னிடத்தில் முன்னைவினையால் பிரயோசனமில்லாமற்
போய்விட்டதோ? ஆயினுமெத்தகைய துன்பம் வரி
னும் அப்பெருமான் றிருவடிமலர்களை யொருபோது
மறவேன். திருவேற்காட்டு நாதனையே தியானஞ்செய்
வேனெனச் சிந்தித்துக்கொண்டிருக்கையில், பரிபூரண
ஞான பரமசிவம் பார்வதியுடன்றிருகுமாரருஞ்சூழவெ
திர்வந்து பரசுராமனைக் கையாலெடுத்து மன்மதவுப
வாக்கி அன்ப! நினக்கு வேண்டும் வரம்யாதெனா:
ஐயனே! ஆராலுமறிதற்கரிய நின்றிருவடியை யின்று
நான் காணப்பெற்றேன். அடியேனை யொருபொருட்
டாய் மதித்து கானத்தில் வந்து காட்சிதந்தீர் என்
புண்ணியமே புண்ணியம். நான் தெரியாது செய்த
பிழையனைத்து மன்னிக்கருளவேண்டும். என்றந்தை
யைக்கொன்ற கார்த்தவீரியார்ச்சுன னிருபத்தொரு
தலைமுறைவரையில் நாசஞ்செய்து அவர்களிரத்தத்தில்
நான் தருப்பணஞ்செய்தல் வேண்டும். நான் பூசித்த
இந்தப் பரசுராமலிங்கத்தினைத் தரிசித்தவர்கள் புத்திர

பௌத்திரருடனே வாழ்ந்து மோட்ச மடையவேண்டும். நாமெடுத்த தீர்த்தத்தில் அமாவாசைதினம் மூழ்கினோர் மிகுந்த செல்வத்தினை யடையவேண்டுமென்றனர். ஆண்டவன் அங்ஙனமே யாகுகவெனக் கூறிச்சிவலிங்கத்தி லமர்ந்தருளினர்.

பாகராமச்சருக்க முற்றிற்று.

அடிமுடி தேடிய சருக்கம்.

சிவாக்கிரயோகிகளே! பண்டைய காலத்தில் சிற்சில முனிவர்கள் தங்களுக்குண்டாகும் சன்மத்தினை யொழித்துக் கொள்ளும் பொருட்டு பிரமனை நோக்கி நெடுங்காலந் தவம்புரிந்தனர். பங்கையன் வெளிப்பட்டு முனிவர்களே! நீங்கள்கொண்ட வெண்ணமிக வரியது. அது உங்கட்குச் சித்திக்கவேண்டுமானால் அறியாத புகழினைப் பெற்றோங்கு மறைக்காட்டினையடைந்து, மாதொருபாகனை மலரிட்டருச்சனை புரிதல் வேண்டுமென்றனர். அம்மொழிகேட்ட முனிபுங்கவர்கள்* பூவைமாநகரினுக்கு வடகிழக்கிலுள்ள திருவேற்காட்டினை யடைந்து, வேததீர்த்தம் படிந்து விபூதியுருத்திராக்கம் பூண்டு விகசிதமானமலர்களைக் கொண்டு வேதநாயகனை யருச்சித்துப்போற்றி, காந்தநாயகனுக்குச் சமீபத்தில் வடக்குத்திக்கில் ஒரு சிவலி

---

* பூவையென்பது பூவிருந்தவல்லி.

ங்கமெழுந்தருளச் செய்து வணங்கிப் பலவரமேற்று மறலிபயமின்றி வாழ்ந்தனர். சுவேத னென்பவன் அதற்கருகிலொரு சிவலிங்கத்தினைத் தாபித்து நமன் பயமின்றியிருந்தனன். மார்க்கண்டேய முனிவரும் இவ்விடத்துச் சிவலிங்க பூசைசெய்து காலன்றன்பத் தினைக்கடந்தனர். சாலங்காயனென்பவனுடைய பவு த்திரனிறந்துவிட அச்சிறுவன் றந்தை இத்தலத்துப் பூசித்து மறுபடியுந் தன் புத்திரனுக்கு உயிர்வரும்படி செய்து கொண்டனன், இன்னம்பலபே ரிவ்விடம் பூசித்துத் தீர்க்காயுளைப்பெற்று வாழ்ந்தார்கள்.

முன்னொருகாலத்தில் சலப்பிரளய முண்டாகி உலகமனைத்து முழுகிவிட்டது. சத்தியலோகத்திலுள்ள சதுர்முகப் பிரமாவானவர் மறுபடியும் பூமியினைப் பழையபடிசிருஷ்டிக்க வேண்டுமெனக்கருதித்தன்னுல கத்தினின்று மெழுப்பி யெங்குஞ் சுற்றி வருகையில் திருப்பாற் கடலில் ஆதிசேடன் மீது தூங்கிக்கொண் டிருக்கும் திருமாலினைக்கண்டு அவரை நித்திரையினி ன்று மெழுப்பி நீயார்? எனக்கேட்டனர். அவர் நான் விண்டு, உன்றந்தை, உலகத்தினை இரட்சித்து வருபவரென்றனர். பிரமாகேட்டு நகைத்து இஃதெ ன்ன வாச்சரியமாக விருக்கிறது நான் சிருஷ்டிகர்தா வாகவிருக்க, என்சிருஷ்டியிலெல்லாம்படங்கிக் கிடக்க யாவருக்குநான் றந்தையாகவிருக்க, நீ எனக்குத் தந் தையென்றதென்னை? எனவும், விண்டுவுஞ்சினந்து இரு வருமொருவருக் கொருவர் வாக்குவாதம் புரிந்து

நெருங்கி யொருவர்மேலொருவர் அனேகமான பாண
ங்களைப் பிரயோகித்து வலைகமனைத்து நடுநடுங்கயுத்தம்
புரிந்து, ஒருவரை யொருவர் மேலேதூக்கி யெறி
ந்து, மல்யுத்தம்புரிந்து நீ பெரியன், நான் பெரிய
னெனக்கூறிப் பதினாயிரம் வருடம் யுத்தஞ்செய்தனர்.
இங்ஙனம் போர்புரிவோர் மத்தியில் சோதி சொரூப
மாய் மங்கள விக்கிரகமான சிவலிங்கமொன்று அண்ட
கோளகையின் முகடிங்கிழிபட வெழுந்து நின்றது.
கண்ட விருவரும் பயந்து நடுங்கி யொன்றுந் தோன்றா
தவராகி இஃதென்னை ? நான்பெரியவன்நான்பெரியவ
னென நாமிருவரும் யுத்தஞ்செய்ய நமக்குமேலிதோ
வொருமூர்த்தி நம்மிருவர் மத்தியில்தோன்றியதே.இத
னடியினையும் முடியினையும் காண்போமெனத்தங்களுக்
குள் பேசிக்கொண்டு, விஷ்ணுவானவர் பன்றி யுருவ
மெடுத்துப் பாதாளவழியாக வாயிரவருடந் தேடியும்
அடியினைக்காணாது மிகவிளைத்துப் பூமியின்மீது வந்து
நின்றனர். பிரமன் அன்ன வடிவமெடுத்து ஆகாயத்
திற் பறந்து ஆயிரவருடந் தேடியலைந்து சிறகுக ளெல்
லா மொடிந்து திரும்பிக் கீழ்வந்து நின்றனர்.இருவரு
மொருவரை யொருவர் பார்த்துநம்முடைய தன்மை
மிகநன்றா யிருக்கிறது, நம்முடைய செருக்கெல்லா
மொழிந்தது, ஆயினுமின்னொருதரம் முயற்சித்துப்பார்
ப்போமோ ? என்றாலோசித்துக் கொண்டிருக்கையில்
ஆகாயத்தில் இருக்கு வேதமானது தோன்றி,ஏ தேவ
ர்களே ! உத்தம வேதியர்களாலே துதிக்கப்படுபவன்

யாவன்? சூரியசந்திரர் முதலியவைகளைப் பிரகாசிக்கச்செய்பவன்யாவன்? பெருங்கருணையால்யாவருக்கும் பெரும்பதமளிப்பவன் யாவன்? அவனன்றோ உங்கள் மத்தியிலுதித்தவன், அவனன்றோ உங்கள் மயக்கத்தினைத் தீர்ப்பவன் என்றது. யசுர்வேதந்தோன்றி, ஏதேவர்களே உங்களிருவரையுந் தமது வலதுபக்கத்திலு மிடதுபக்கத்திலுந் தந்தோன் யாவன்? தகராகாயத்தி லெழுந்தருளி யுலகத்தில் தோய்ந்தும்தோயாதும் நின்றோன் யாவன்? அவனன்றோ உங்கள் மத்தியிலுதித்தவன். அவனன்றோ உங்கள் மயக்கத்தினைத் தீர்ப்பவனென்றது. சாமவேதந் தோன்றி, ஏதேவர்களே! உங்களிருவருக்கும் வைகுண்டத்தினையுஞ் சத்தியலோகத்தினையு முண்டாக்கிக் கொடுத்தோன் யாவன்? முச்சத்திகளையும் மதிட்டித்துச்சின்மயரூபமாக விளங்கிப் பிரபஞ்சத்திற்கு அதிட்டான மூர்த்தியாயிருந்து விளங்குபவன்யாவன்? நினைத்தவுட னஞ்ஞானத்தைநீக்கி நிலையான கதி தந்தருளுபவன் யாவன்? அகிலமனைத்தும் வழிபாடு செய்ய நின்றான் யாவன்? அவனன்றோ உங்கள் மத்தியிலுதித்தவன், அவனன்றோ உங்கள் மயக்கத்தினைத் தீர்ப்பவனென்றது. மூன்று வேதங்களுஞ் சொன்ன மொழியினைக் கேட்டுக் கண்ணுதல் மூர்த்தியெனத் தேர்ந்து இருவரும் பயந்து நடுங்கி,

முடிவிலா வின்பமான முதல்வனே சரணமுன்னட்
கடுநுகர்ந் தெம்மனோரைக் காத்தவா சரணங்காலன்

படிமிசைவீழ்க்காய்ந்த பதாம்புய சரணம்பணிபி
லடியனே னறிவிலாமை யகற்றினை சரணமாமால்.

எனத்தோத்திரித்து நிற்க, சச்சிதாநந்தனாகிய சாம்பசிவன் எதிர்தோன்றி நீங்கள் விழையும் வரமி யாதென? பெருமானே! அறியாமையா லெங்களியற் றிய போரினைத் தடுத்தாண்ட புண்ணிய சொரூபியே எங்கட்கிப்பொழுதுமேனு மித்தகைய மயக்க மடிக்கடிவரா மலும் தேவரீர் தெய்வமென்னும் கொள்கை நீங்கா மலுமிருக்கக் கிருபைசெய்தருள வேண்டுமெனவிருவரு மிரந்திருக்க, சுவாமி அவர்களை நோக்கி, நீங்களிரு வரும் நாமிகவிரும்பி விழைந்தருளுந் திருவேற்காட் டினை யடைந்து நம்மை யருச்சித்து அவ்வனத்தின் பா ங்கர் சிவலிங்கமொன்று பிரதிஷ்டித்துப் பூசித்துப் பழையபதங்களின் தொழிலைப் பெற்று வாழக்கடவீர் களாக உலகத்தில் தவம் சந்நியாசம் யாகம் விரதம், தர்ம முதலியவற்றா லுண்டாகும் பலன், சிவலிங்க பூசையா லுண்டாகும் பலனுக் கோர்கோடியி லொ ருகூறு மொவ்வாது. எத்தகைய குலத்திற் பிறந்தவ ரேனும் சிவலிங்கவருச்சனை செய்வோர்க்குப் பாவமே கிடையாது, யமபயமுங் கிடையாது, விண்ணோர், விஞ் சையர், அமரர், அட்சர், நால் வருணத்தோர் முதலிய யெத்தகையரேனும் சிவார்ச்சனையிலும், விபூதி யுருத் திராட்சத்திலும், யாதுக்கிரிடமில்லையோ அவர்கள் சண்டாளன் வீட்டிலே நாயைத்தின்னு மவனைக்காட் டிலும் கீழான சன்மத்திநோடு பிறப்பர். ஆதலின்

உடனே சென்றுசிவபூசை செய்கவெனச் செப்பிமறை
ந்தனர். அவ்வண்ணமே திருவேற் காட்டிற்குச்
சென்று மந்தாகினி தீர்த்தத்திற் படிந்து விபூதி யுருத்
திராக்கம் பூண்டு வேதகோத்திரஞ் செய்து சிவலிங்கந்
தாபித்துத் திருமஞ்சன மாட்டிப் பூசித்து வேண்டும்
வரம் பெற்றுத் தங்களுலக மடைந்தனர்.

அடிமுடிதேடிய சருக்க முற்றிற்று.

வலம்புரிசருக்கம்.

சிவகாருண்ணிய முனிவர்களே ! அயோத்
திமா நகரினை யரசாட்சி செய்து வந்த தசரதசக்ர
வர்த்தியின் புத்திரனாகிய இராமர் இலங்காதி பதி
யாகிய இராவணனைக் கொல்ல அதனாலுண்டாகிய பிர
மகத்தியினை யொழித்துக்கொள்ளும் பொருட்டுச் சே
துவில் இராமலிங்கப் பிரதிஷ்டை செய்து பூசித்துவரத்
தேவாதி தேவனாகிய சிவபெருமான்வெளிவந்து இரகு
ராமா ! நினைப்பிடித்துவந்த பிரமகத்தி யுன்னை விட்
டொழிந்தது. உனது அந்தியகாலத்தில் சிவகதியடை
யும்படி வேதவனமடைந்து நம்மைப் பூசிப்பாயாகவெ
னக் கட்டளையிட்டுக் கரந்தருளினர். இராமர் சீதா
பிராட்டியுடன் விமானமேறித் திருவேற்காட்டை
யடைந்து தேவர்கண்ட மடுவில் தீர்த்தமாடி நிகமே
சனைத் தரிசனஞ் செய்துக்கொண்டு காந்த நாயகன்

கோயிலுக்குக் கீழ்பாலில் * இராமேசலிங்கம் என ஒன்று தாபித்துப் பூசித்துச் சிலநாள் வாழ்ந்து, அரிய வரங்களை யடைந்து, அயோத்தியினைச் சேர்ந்து, பதினையிரமாண் டரசாட்சி செய்து பின்னர் சிவகதி யடைந்தனர், சிலகாலத்திற்குப் பின் அவ்விராம புத்திரர் களிருவரும் தமது தந்தைபால திருவேற்காட்டு மகிமையைத் தெரிந்து இத்தலத்திற்கு வந்து வேததீர்த்தத்திற் படிந்து வேதநாயகனைப் பூசித்துச்சிலநாள் தவஞ்செய்து கொண்டிருந்து பின்னர் தங்கள் பெயரால் o குசலிங்க மெனவும் இலவன் லிங்கமெனவுந் தாபித்துப் பூசைசெய்து அயோத்திக்குச் சென்றனர்,

முன்னொரு காலத்தன்னில் நான்முகனும், நாரணனும், இந்திரனும் மற்றைய தேவருங்கூடி அசுரர் தங்கட்குச் செய்யு முபத்திரவத்தினை நீக்கிக்கொள்வதற்குபாயமெப்படி யெனச் சிந்தித்துத் தங்கள் காரியஞ் சித்திபெறவும், அசுரர்தந்திர மழியவுமெண்ணி மந்தரகிரிக்குச்சென்று மழுவனைப் பூசித்து வருகையில், தேவர்பெருமான் தெரிசனந்தந்து,தேவர்களே! நீவிர் நினைத்த காரியம் நிலைபெறக் கடவதாகவெனவரமீந்து தானுந் தன் பத்தினியுமாக அந்த மந்தரகிரியி லொரு பாங்கர் ஒளியம்பலநீட்டி யிருந்தவொரு மண்டபத்தி லெழுந்தருளி வேடிக்கையாகப் பார்த்து வருகையில் ஒருபக்கத்தில் ஏழுகோடி மகாமந்திரர்கள் சூழ விரு

---

* இவ்விலிங்கம் பெருமாநகரத்தி லிருக்கின்றது.

o இவ்விரண்டு லிங்கங்களும் கோயம்பேட்டி லிருக்கின்றன.

பிரணவ மனுவினைக்கண்டு இவை யென்னவெனப் பார்
வதியார் கேட்க, சுவாமி, பெண்ணே ! இவ்விரண்டு
மனுக்களே வேதாகமங்க ளுற்பத்தி யாகிறதற்குக்கார
ணமா யுள்ளன. அது சத்திப்பிரணவம், இது சிவப்
பிரணவமெனக் கூறி இருவருமுறைமேய இருமகாமந்
திரங்களை நோக்கித் தீட்சித்த மாத்திரத்தில் அவ்விர
ண்டுபிரணவங்களுமொன்றுடனொன் றளவளாவ அவ்வி
ரண்டினின்றும் பிரணவ ரூபமாகிய யானைமுகத்துடன்
ஒருபுத்திர னவதாரம் செய்தனன். அப்புத்திரனை யம்
மையப்பரிருவரு மெடுத்துத்தம்மடிமீதிருத்தியணைத்து
முத்தமிட்டபின் அம்மையார் நாயகனை நோக்கிச்சுவா
மீ ! இப்புத்திர னெல்லாத் தேவர்கட்கு மதிபதியாக
விருக்க வேண்டுமெனப் பிரார்த்திக்க வதற்கிசைந்த
பெருமான் பிரமாதி தேவர்களையும், அகத்திய ராதி
முனி புங்கவர்களையும் யழைப்பித்தார் சமீபத்தி லிரு
த்தி மூத்தபிள்ளையாரை யொருபீடத்தி லெழுந்தருளச்
செய்து, கங்கை நீராட்டி, செழுங்கலன் சாத்தி, மணி
முடி சூட்டி ஏ தேவர்களே இன்றுமுதலிக்குமாரன்
உங்கட்கெல்லாந் தலைவனாக விருக்கக்கடவன் விண்
ணுலகத் தவரேனும், மண்ணுலகத் தவரேனும் யாதா
மொரு காரியஞ்செய்யின், இவனை முதலில் பூசித்தே
யாரம்பிக்க வேண்டும், இல்லையேல் அக்காரியஞ் சித்தி
யாகாதபடி விக்கினமடையும். இவனுக்கு விக்கினவிநா
யகனெனப் பெயர்வழங்கக்கடவதாகவென்றனர். தேவ
ர்சந்தோஷித்துப் பூசித்து விடைபெற்றுச் சென்றனர்.

பின்னர் விநாயகக்கடவுள் மகா கைலாயத்தில்
விளையாட வாரம்பித்துச் சூரியமண்டலத்தி னுழைகிற
தும், சந்திரமண்டலத்தில் வருகிறதும், மேருமலையில்
புகுகிறதும், மந்தரமலையில் வெளிவருகிறதும், இவ்வ
ண்ணம் பல சிறு குறும்புசெய்து, நீர்விளையாட நினை
த்துத் திருப்பாற் கடலுக்குச்சென்று அக்கடலிலுள்ள
நீரெல்லாம் தன்னொரு துதிக்கையால் உறிஞ்சுதலும்
அத்துதிக்கையி னுள்ளாக வெள்ளத்துடன் ஆதிசேட
னும், அதன்மீது பள்ளிக்கொண் டிருந்த நாரணனும்,
அவருந்தியி லிருந்த பிரமனும், அவர்மனைவி இலக்கு
மியும் அவர்சமீபத்தி லிருந்த கருடனும் அவர்கையி
லிருந்தசங்குசக்கரங்களும் பிரவேசமாகச் சிறிது நேர
த்திற்குப்பின் விநாயகர்மீளவும் பூமியின்மேல் விடுத
லும், அவ்வெள்ளத்தில் சிதறுண்ட சிறு துரும்புகள்
போல அயனரி முதலாயினோர் எங்குஞ் சிதறி விழுந்து
மெள்ளமெள்ள ஓரிடத்தி லொன்று சேர்ந்து, தாங்
கள் பட்டபாடுகளையெல்லாந்தமக்குள்பேசி முன்பிறப்
பில் செய்த புண்ணிய வசத்தால் இப்பொழுது புனர்
ஜன்மம் பெற்றோம் என்று மயக்கந்தெளிந்து மகிழ்ந்
திருக்கையில் திருமால் தனது கரத்திலிருந்த பாஞ்ச
சன்னியமாகிய வலம்புரிச்சங்கை காணாது திகைத்துக்
கொண்டிருக்கையில், அவ்வலம்புரி சத்திப்பதைக் கே
ட்டு அது விநாயகன் கணத்தலைவர்களிடத் திருப்பதா
கத் தெரிந்து கைலை யடைந்து கண்ணுதலை வேண்ட
அவர் திருவேற்காட்டினை யடைந்து தவஞ்செய்துகண

பதியினிடத்துப் பெருவாயெனக் கட்டளை யிடக்கேட்டு விண்டு விடைபெற்றுத்திரும்பி வடவேதராரண்யஞ் சென்று மந்தாகினி தீர்த்தம்படிந்து விநாயகக் கடவுளை நெடுங்காலம் பூசித்து அவரிடத்து அவ்வலம் புரியினை யடைந்து, பலவரங்களு மேற்றுத் திருப்பாற்கடலினை யடைந்தனர். அத்தலத்து விநாயகருக் கதுமுதல் வலம்புரி விநாயக ரெனப் பெயர்வழங்கலாயிற்று.

வலம்புரிச் சருக்க முற்றிற்று.

முனிவர் பூசைச்சருக்கம்.

சிவாநு பூதிமான்களே! விண்டு மூர்த்தியானவ ரொருகாலத்திற் புத்தாவதார மெடுத்து நாரத முனிவருடன் சென்று செய்த சாலங்களினால் திரிபுரத்தில் காமிய பத்தியினை யுடைய அசுரரெல்லா மயங்கிச் சிவபிரானை வணங்காது கெட்டனர். நிஷ்காமிய பத்தியினை யுடைய சுசீரன், சுகன்மன், சுபுத்தியாகிய மூவர்மாத்திரமயங்காது சிவபக்த சிரோமணியாய் விளங்கினமையின், அவர்கள் விழையும் வரம் யாதெனத் திரிபுராந் தகமூர்த்திகேட்க வெம்பெருமானே! நாங்கள் தேவரீருடைய திருக்கோயிலில் துவாரபாலரா யிருத்தல் வேண்டுமென அம்மூவருங்கேட்டுக்கொள்ள, அங்ஙனநீர் விரும்பில்திருவேற்காட்டினையடைந்துகீழ்பாலினுங்கள் பெயரால் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து பூசிப்பீரேல் வேண்டும்வரந் தருவோமெனக் கூறி யந்தர்த்

தியானமாயினர். அங்ஙனமே யவர்கள் வேதவன மடைந்து வேததீர்த்தமாடி, காந்தநாயகரை வணங்கி யவருக்குக் கிழக்கே * திரிபுராந்தகேசரென ஒருவருட் குறிதாபித்து அருச்சனை புரிந்து தங்களுக் கிஷ்டமான வரங்களை யேற்றுத் துவாரபாலராய் விளங்கினர்.

துவாபர யுகத்தில் பாரதப்போரில் சுற்றத்தார்களொருவருக் கொருவர் விரோதித்து அதர்மமாக யுத்தஞ் செய்வதாகப் பலராமர் கண்டு கோபங்கொண்டு தீர்த்தயாத்திரை செய்யக்கருதி, கடலாடை சூழ்ந்த காசினி முழுதுஞ் சஞ்சரித்து, கோடி தீர்த்தம்படிந்து அங்கும் பல கோயில்களிருக் கக்கண்டு அவ்வாலயங்களை முக்கால் வலம்வந்து, அங்கிருக்கு மாதவர்களை நோக்கி, முனிவர்களே! இவ்வுலகத்திற் புண்ணியதலங்களெத்தனை யுள, அவற்றுட் சிறந்தது யாது? என வவர்கள் கூறத்தொடங்கினர். அலாயுத மேந்திய அண்ணலே! இந்த நாவலந்தீவிலே தேவர் விழைவதென்றும் பரதகண்டம். யாவரும் புகழ் நவகண்டத்துள்ளும் கருமஞ் செய்யக் கூடுதல் குமரிகண்டம், குமரிகண்டத்திற் கிணைகிடையாது. இக்கண்டத்தி லெண்ணிறந்த தலங்களுண்டு, இவற்றுள் விண்டுதலங்கள் சிறப்புடைத்து. இவற்றுள் மாந்தரியற்றிய சிவலிங்கத் தலங்கள் சிறப்புடைத்து. இவற்றுள்ளும் தேவர் பிரதி

* இவ்விலிங்கம் அயனம்பாக்கத்திலுள்ள எட்டு லிங்கத்தி லொன்று.

ஷ்டித்த சிவத்தலங்கள் சிறப்புடைத்து. இவற்றுள் சுயம்புத்தலங்கள் சிறப்புடைத்து. இவற்றுள் காசி சிறப்புடைத்து, இதனினுங் காஞ்சி சிறப்புடைத்து. இதனினும் திருவேற்காடு மிகச் சிறப்புடைத்து, இத்தலத்திற் பிறந்தோர், வாழ்ந்தோர் சென்றோர் யாவருமுத்தியடைவரென்றனர். கேட்ட பலராமர் பரமசந்தோஷங் கொண்டு திருவேற்காட்டினையடைந்து வேததீர்த்தமாடிக்காந்த நாயகனைத் துதித்து, உபயன்யுபக வானிடத்துத் தீட்சை பெற்றுத் திரிபுராந்தகேசருக்குத் தெற்கில் பலராமேசர் எனச் சிவலிங்கம் பிரதிஷ்டித்து அருச்சனை புரிந்து பலவரமேற்று வடமதுரைக்கேகினர்.

மற்றொரு காலத்தில் இத்திருவேற்காட்டில் வாலகில்லியர், விரசர், விரதாக்கினி, வசிட்டர், கபிலர் பராசரர், பயிலர், ஆர்த்தி, சம்புக்தி, சனகர், நிமானி, சனாதனர், மதனைச்சுனர், சனந்தனர், சனற்குமாரர், நிருமர், காசிபர், டிண்டி, வயிசசுதர். சகட்டினு, வாலிவான்மீகர், பார்க்கவர், வியாக்கிரபாதர், சாத்தார், கூர்கோராத்திரையர், கௌதமர்; உசனர், சத்தியதபா முண்டிசுரர், ஆயத்தம்பர், காத்தியாயனர், சற்கர், சத்திசுவலாயனர், நரர், பயத்துதர், சுத்தமர், நிரகர் கிருதர், சம்பரர், கிழவியர், சுதர்மர், முதலிய முனிவர்களும் * பாண்டவர், கன்னர் சிபி முதலிய அரசர்

* பாண்டவர் பூசித்த விடத்திற்கு அருச்சுனமேடு என வழங்குகிறது. இங்கொரு லிங்கமுமுண்டு. ஆலயத்திற்குக் கிழக்கே இருக்கிறது.

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல்நிலையம்,
சென்னை - 600090

களுநர், ஆறு சாத்திரம் நால்வேதம், ஆகமம், பதினெண்புராண முதலிய நூல்கள் தேவ வுருவெடுத்து வந்தும், நவக்கிரகங்களும், மகாபலி வாணன் முதலிய அசுரர்களும் ஆக இவர்முதலாக நூற்றைம்பத்தைந்துபேர் தங்கள் தங்கள் பெயர்களால் சிவலிங்கப் பிரதிஷ்டைசெய்து பூசித்துப் பேறுபெற்றனர்.

முனிவர்பூசைச் சருக்கமுற்றிற்று.

பலன்பெறு சருக்கம்.

சிவானுபூதிமான்களே! நவமணியினாலேனும் பொன்னாலேனும், சிலையாலேனும் சிவலிங்கப் பிரதிஷ்டிக்கின் சிவபதமடைவர், விரதமனுட்டித்தல், தவமிழைத்தல், யாகம்புரிதல் சமுத்திர ஸ்நானஞ்செய்தல் கங்கைபடிதல், பல தீர்த்தமாடல் முதலியவற்றாலுண்டாகும் பலன் ஒரு சிவலிங்கபனமத்தலுக்குச் சமமாகாது. விஷ்ணு, விரிஞ்சன், இந்திரன், தேவர்கள், இருடிகள், முனிவர்கள் ஆகிய இவர்கள் பூமியிலும், நதிக்கரைகளிலும், மலைகண்மீதும் சிவலிங்கப்பிரதிஷ்டைசெய்து சிவார்ச்சனை புரிந்தார்கள். மோட்சம் விரும்புவார் சிவலிங்கப்பிரதிஷ்டையே செய்வர். இத்தகைய சிவலிங்கப் பிரதிஷ்டை திருவேற்காட்டிற் செய்யினும் அத்தலத்திலுள்ள சிவலிங்கத்தினை யொருதரம் வணங்கினும், உலகமனைத்தும் புகழ விமானமேறி, வாசவனாதியர் வணங்க, தேவர் பூமாரிபொழியக் கைலாயமடை

வது திண்ணம். திருவேற்காட்டில் அம்மையப்பரை யொரு பீடத்திற் செய்து வைத்தோர்போரமநெறி யடைவர், அம்மனைத் தனியே பிரதிஷ்டிப்போர் சந்ததிவிளங்கச் சகலபோக மனுபவித்துப்பெருமான்றிரு வடியை யடைவர் நடராஜ விக்கிரக மமைப்போர் அடையும்பலனுக் களவில்லை திரிபுராந்தகர் விக்கிரக மமைப்போர் இரதாரூடராய்ச் சிவலோகஞ் சேர்வர் கங்காதர மூர்த்தியை யமைப்போர் முத்தராய் விளங்குவர், சந்திரசேகரரை யமைப்போர் சண்டாளரே யாயினும் ஜாதியி லுயர்ந்து சாம்பசிவன் றிருவருள் பெறுவர் தட்சணாமூர்த்தியை யமைப்போர் ஞானநாயகராய் விளங்குவர், பிக்ஷாடனரை யமைப்போர் நீங்காச் சிவகதி யடைவர். விநாயகரை யமைப்போர் யாதொரு விக்கினமின்றி வாழ்வர், வள்ளி தேவசேனாதிபதியை யமைப்போர் கந்தகிரி யடைவர், துவாரபாலகரை யமைப்போர் கயிலையினலம் பெறுவர்வர் பிரமனை யமைப்போர் சத்தியலோகமடைவர், விண்டுவை யமைப்போர் வைகுந்தமடைவர், இரதம் செய்து வைத்து அதன்மேல் வேதநாயகனை யெழுந்தருளச் செய்வோர் அடையும்பலன் அம்ம! அம்ம! மிகப்பெரிது. சரஸ்வதியினை யமைப்போர் நன்குபாட வல்லவராவார், இலக்குமியை யமைப்போர் செல்வத்தினை யனுபவிப்பர், வயிரவரை யமைப்போர் பேய் முதலிய வற்றால் துன்பமடையார், இதுகாறுங் கூறிய மூர்த்திகளையல்லாமல் அவசியமான வேறு மூர்த்திகளை இத்

தலத்தி லமைப்போர் வானவர்சூழ வியன்பதமேவி
வாழ்வர், மண்ணினால், மரத்தால், செங்கல்லால், கரு
ங்கல்லால் வெள்ளியால் பொன்னால், மணியால் கோ
யிற் கைங்கரியங்கள் செய்யின் அவற்றவற்றிற் கதிகங்
கோடி புண்ணிய மருவிச சிவலோகத்தில் பன்னாள்
மருவுவர், முன்சொன்னமூர்த்திகளைப படத்திலேனும
சித்திரத்திலேனும் எழுதி இவ்வாலயத்தில் வைத்து
வணங்கினு முததியுண்டாம், சிறு பிள்ளைகள் இத்த
லத்தில் விளையாட்டிற்காக மண்ணினாற் சிவாலயம்
போலசெய்து விளையாடுவரேனும் அனந்தங்காலமருங்
கயிலையில வாழ்வார், இததலத்தில் சீரணமாயிருக்குங்
கோயிலினைப புதுபபிக்கின், மூர்த்தி நூதனமாகச் செய்
தவரடைந்த புண்ணியத்தினு நான்குபங்கதிக மடைட
வர். இத்தலத்தில் வயிற்றின் மித்தமஆலயப்பணிசெய்
தோரும், சாணமிட்டோரும், அலகிட்டோரும் சாந்
திராயண விரதமாயிரமும் யாக நூறும் செய்தோர
டையும் பலனைப் பெறுவர், வேதாகம நன்குணர்ந்து
விபூதி யுருத்திராக்கம் பூண்டு, வேதநாயகனைப் பூசி
த்து ஆதிசைவர்கட்கு இடமும்,அன்னமுமுதவுவோர்
மேற்குறித்த பலன்கள் யாவுமடைந்துசிவகதியடைவர்
முத்தமழவோய்பு மறைப்வர்கட்கும், சிறுவர்கட்கும்
இத்தலத்தி லன்னமளிப்போர் இவ்வுலகில்போக நீ
ப்ப வனுபவித்துச் சித்தர் விஞ்சையர் சூழச் செம்
பொன் வானுலகை மடைவர். இத்தலத்தில் எத்தனைய

ஜாதியாரேனும் ஞானிகளாயினார்க்கு ஒருகவளமன்ன
மிடுவோரா யெண்ணில் கோடி மகத்தின் பலனைப் பெறு
வர். விதம்விதமான பரிமளமுள்ள மலர்களைக்
கொணர்ந்து வேதநாயகன் றிருமுடி மேலருச்சனை செ
ய்யின் விழைந்த வெல்லாப் பலன்களையும் விமலனளிப்
பர், ஒரு தீபமேற்றிவைக்கின் ஆயிர மசுவமேதம் பல
னுண்டாம். தயிலம், கலவை, சாந்தம், பால், நெய்
முதலிய கொண் டபிடேகஞ் செய்யின் இவ்வுலக
போகமும் அவ்வுலகவாழ்வுஞ் சித்திக்கும். வஸ்திரம்,
பட்டு, முந்நூல், பீதாம்பரம் சாத்தின் அவற்றிலுள்ள
யிழைக ளெத்தனையோ அவ்வளவுகாலஞ் சிவலோகத்
தில் வாழ்வர், அன்ன நிவேதனஞ் செய்யின் என்றுஞ்
செல்வமனுபவமும், சிவகதியு முண்டாம். ஏலம்,
தக்கோலம், இலவங்கம் தாம்பூல முதலிய வளிக்கின்
போகபோக்கியமும், வெண்கபிலைவாழ் வுங்கிட்டும்,
கண்ணாடி, வெண்சாமரம், குடை, ஆலவட்டம் ஆகிய
கொடுக்கின் புவியாளும் போகமும்புண்ணியவீடு முண்
டாம். இத்திருவேற்காட்டில் வேற்கண்ணியம்மை
சமேதராக விளங்கும் வேத நாயகருக்குப் பங்குனிமா
தத்தில் பிரமோற்சவ நடத்தி உத்தர நட்சத்திரத்தில்
திருக்கல்யாண வைபவஞ் செய்து வைப்பவர்கள்பத்து
யுகம்வரையில்பரமன்கயிலையிலெழுந்தருளியிருந்தபின்
னர்பரமன் றிருவடி நிழலையடைவர். வசந்தோற்சவஞ்
செய்விப்பவர் பொன்னுலகத்தி லிந்திரபத மடைவர்
பவித்திரோற்சவஞ்செய்விப்பவர் அநித்த சன்மத்தில்

முத்தராய் விளங்குவர், அரைக்கட்டுற்சவஞ் செய்விப்பவர் அவனியிற் செல்வராய் யிருப்பர். நடராஜஉற்சவ நடத்துவிப்பவர் நாளிலத்துப போகங்களை யனுபவித்துப்பின் நம்பெருமானடி சேர்வர். ஊஞ்சல் மகோற்சவம் செய்விப்பவர் பாசமாகிய மாயையின் மயக்க மொழிவர், பிரதோஷ வுற்சவம் செய்விப்பவர் கயிலையிற் சிவகணத்தலைவராயிருப்பர், வேதநாயகருடன் அடுத்த திவ்விய தலங்களிலுள்ள மூர்த்திகளையு மித்தலத்தி லெழுந்தருளச் செய்து பாலிநதியில் திருவூறலுற்சவஞ் செய்விப்பவர் இம்மையில் நற்குணம வாய்ந்த மனைவியையும் கல்வியிற் சிறப்படையத் தக்க புத்திரர்களையும் சௌந்தரியமுற்ற புத்திரிகளையும் வாய்ந்து தீர்க்காயுளுடன் செல்வத்தினை யனுபவித்து மறுமையில் இந்திரலோக வைபவங்களைப் புசித்துப் பின்னர் கைலாயத்திற் சிவசாரூபமடைவர். அம்பிகைக்கு ஆடிப்பூரவுற்சவமும், நவராத்திரியுற்சவமும் சுக்கிரவாரவுற்சவமும் செய்விப்பவர்மிகுந்தஞானத்தினையடைந்துசகல போகங்களையுமனுபவிப்பர், வலம்புரிவிநாயகருக்குச்சதுர்த்தியுற்சவஞ்செய்விப்பவர் நாயக னெண்ணியவாறுசகலசித்திகளையுமடைவர் சண்முகக்கடவுளுக்குச். சஷ்டிமகோற்சவமுங் கிருத்திகைவிசாகமகோற்சவம் செய்விப்பவர் அஷ்டைஸ்வரியத்திற்கு முரியராவர். மற்றுமந்தந்த காலத்தில் வேண்டியநித்திய நைமித்தியபஞ்சபர்வமுதலிய உற்சவங்களைச் செய்விப்பவர் இம்மைக்குவேண்டிய வெல்லா போகங் களையு மடைந்து மடை

யாதபடி யனுபவித்துச் சிவானந்தச் செல்வரா யிருப்பர். இத்தலத்தினடக்குந் திருவிழா தரிசனஞ் செய்ய வருவோர் யாவருஞ் சிவகணத் தலைவராகவே விளங்குவர். சிவாலய தரிசனஞ் செய்வோர் விபூதி யுருத்திராட்சமின்றிச் சிவபெருமானைத் தரிசனஞ் செய்தல் கூடாது, மஞ்சள் பூச்சும் மாங்கலியமு மில்லாத மாதரை விதந்து என்று கூறுவதுபோலவிபூதி யுருத்திராட்ச மில்லாதவரை யங்ஙனமே கூறும் ஆகமங்கள். உருத்திராட்ச மின்றி யொருவன் சிவாலயத்தி னுழைந்து வெளிவருதல், ஒரு நாயானது கோயிலுக்குள்ளோடி வெளிவருதல் போலும்.

பலன்பேறுசருக்க முற்றிற்று.

உகந்தோன்றியசருக்கம்.

சிவாநந்தச் செல்வர்களே! இத்திருவேற் காட்டில்வேதநாயகனுக்குயானை தானஞ்செய்வோர் விமான மேறி யுலகெலாநண்ணி போகமாந்திப் பின்கயிலையினை யடைவர். வெண்மை நிறக்குதிரை தானஞ் செய்வோர் அவனிமேற் போக மருந்தி ஐயன்வாழ் புவனத்தி லனேகநாளுறைவர், பசுவுங்கன்றுந் தானஞ் செய்பவர்பால் பரம்சிவ மதிகபக்ஷம் வைப்பர். ஆபரணங்களைத் தானஞ் செய்பவர் புத்திரர் பலரைப் பெற்று மூன்றரை கோடிகால நாதனுலகில் வாழ்வர்

நன்செய் நிலக்தானஞ் செய்பவர் வருட மொன்றில் அந்நிலத்தில் விளையும் நெல்லொன்றுக்கு ஆயிரங்கற்ப மருங்கயிலை வாழ்வர். அவ்வாலயத்தினைப் படத்தி லெழுதிப் பூசிப்பவர் சிவகதிபுறுவர். இத்தல புரா ணத்தினைச் சந்நிதியில் படித்தவர் அதைக்கேட்டவர் போகபோக்கியங்களை யனுபவித்துப் புராணத்திலுள்ள எழுத்தொன்றிற்கு ஆயிரங்கற்பம் மரனுலகத்துறைவர் பெருமானுடைய நிலத்தினுக்குத் தீதுவராதபடி காப் பவர் அந்நிலத்தினைத் தானஞ்செய்த வரைக்காட்டினு பதின்மடங்கதிக புண்ணியம் பெறுவர். பெருமானுக் குரிய பொருளில் அறையளவு அளவிச்சித்தவர் நரக த்தி லெந்நாளு மூழ்கிக் கிடப்பர், தடாகமும் கிணறு முண்டாக்கினவர் சிவன்முன் னெந்நாளுஞ் செறிந்து நிற்பர். வீதியில்மடங்கள், மண்டபங்கள், சத்திரங்கள் தண்ணீர்ப்பந்தல் அமைத்தவர் மேலான சிவபதவியில் மேம்பட்டுவாழ்வர், நந்தவனமுண்டாக்கினவர்களடை யும் பலனைக் கோடிவருடஞ் சொல்லினும் முடியாது சிவனடியார்கட்குப் பூமி, பசு, மடங் கொடுத்தவரின் பெருமையினைச் சிவனே சொல்ல வல்லவன். அதிதி கட்கு அன்னம் ஆடையளிக்கின், மேற்சொன்ன பல னைக்காட்டினுங் கோடிபங் கதிகம். இத்தகைய தரு மங்கள் கலியுகத்தில் செய்ய முடியாதாகையால் முத் தியினை விரும்புவோர் இத்தலத்தில் வாழ்ந்திருத்தலே போதும். ஒருகணநேர மித்தலத்தி லிருந்தால் எத் தகையபாவஞ் செய்திருக்கினு மொழிந்துபோம் கலி

யில் வேதவனத்தில வசிப்பதைக் காட்டிலும் வேறு புண்ணியமில்லை.

அன்பர்களே! கலிகாலத்தில் ஆசாரியன் சிடனென்கிற கிரமங்கெட்டு வைதீக மார்க்கத்தினையிழந்து சிவபெருமானிடத்தும், வேதத்தினிடத்தும் விபூதியினிடத்தும், உருத்திராக்ஷத்தினிடத்தும் பத்தியின்றி, பஞ்சராத்திரம், மாயாவாதம், பவுத்தம், சார்வாக முதலிய மதங்களில் விழுந்து கவுதமர் பூர்வத்திலிட்டிருக்கும் சாபப்படி யுழன்றிடுவர். சில பாவிகள் ஒரு காலத்தில் அகிலமுழுவதும் பரன்பாலொடுங்கி மறுபடியும் முண்டாகும்போது முதலில் நான்கு யுகங்களையுஞ் சிருஷ்டி செய்ய அந்நான்குந் தேவவுருவெடுத்து வேதவனமடைந்து தென்றிசையில் பாலிநதிதீரத்தில் இலிங்கமமைத்து பணிந்து போற்றிநிற்கச் செம்பவளம்போல் சிவந்து விளங்கும் சடாமுடியையுடைய சிவபெருமான் வெளிவந்து விழைந்தவரமியாதென, சுவாமீ! நாங்கணடைந்து கொள்ள வேண்டியது யாதென்று வேதங்கள் கேட்க, மறைகளே! நீவிர் நால்வரும் முறையே மூத்தி, தன்மம், அருத்தம், காமம் என்னும் வடிவங்களாகவும், அந்தணர், மன்னர், வையியர், சூத்திரராகவும், காமரூபம் கிரமுறுங்கலி யுங்கள் சேடனாகவு மிருக்கக் கடவது. உங்களிடத்தில் தருமவிடையானது முறையே நான்கு, மூன்று, இரண்டு, ஒன்று ஆகிய பாதங்களினின்று உங்களைத் தாக்கும், உங்கள் மூவருக்கும் முறையே பிரமன், சூரியன், விண்

டுதெய்வமாக விருக்க. இக்கலிக்கு நானே தலைவனுயிருப்பன், நீங்கள் மூவரும் இக்கலியுடன் திருவேற்காட்டில் வாழ்ந்து கலியாலுண்டாகுந் தோடத்தினை நீக்கிக்கொண்டு வாழக்கடவீர்க ளெனத் திருவாய் மலர்ந்தருளி மறைந்தருளினர்.

முனிவர்களே! கலியுகத்திற் றிருவேற்காட்டி லின்றி முத்தியெங்கும் பலியாது. இத்திருவேற்காட்டு மான்மியத்தினை யுங்கட்குச் சிறிதே யுரைத்தேன். முழுவது முரைக்க வேண்டுமானால் வேதநாயக னொற்றான் முடியும். இச்சரித்திரத்தினைப் படித்தோர் கேட்டோர் சிருஷ்டி கர்த்தராவர். இப்புராணத்தினைப் பூசையில் வைத்து மலரா லருச்சித்து வணங்கினோர் இரட்சக கர்த்தராவர். அன்புடன் மூன்று முறை படித்தோர் வீட்டின்பமே யடைவர்.

இந்தப்பிரகாரம் திருவேற்காட்டு மான்மியத்தினைக் கவுசிகர் அத்தலத்தினர்கட்குக் கூறியதாகச் சூதமுனிவர் நைமிசாரணியவாசிகட்குச் சொல்லிமுடித்தனர்.

உடந்தோன்றிய சருக்கமுற்றிற்று.

வாழி.

சீர்பூத்த வெள்வேல மரத்தடியிலேவிளங்குஞ் செல்வன் வாழி, யேர்பூத்த வருளுருவ மாகிவளர் வேற்கண்ணி யிலங்கி வாழி, பேர்பூத்த வெண்ணீறு மணிபஞ்சாக் கரமந்த்ரம் பிறங்கி வாழி, பார்பூத்தசிவ சமயம் தமிழ்வேதம் நல்லடியர் பரவி வாழி.

திருவேற்காட்டுப்புராணம்
முற்றிற்று.

௨
சிவமயம்

மூர்க்கநாயனார் சரித்திரம்.

வடசோழ நாடென்னுந் தொண்டை மண்டலத்திலே, திருவேற்காட்டிலே, ஜெயங்கொண்ட வுயர் துளுவ வேளாளர் குலத்திலே வைதிக சைவராகிய சிவனடியா ரொருவ ரிருந்தனர். இவர் விபூதி உருத்திராட்சம் பூண்ட சிவனடியார்களைத் தரிசித்த மாத்திரத்தில் அவர்களைச் சிவமாகவே பாவித்து எதிர்கொண்டு வணங்கி யழைத்துவந்து பலவித உபசாரஞ் செய்து திருவமுது செய்வித்துப் பின்பு தானுண்டு அச்சிவனடியார்கள் விரும்பும் பொருள்களையுங் கொடுத்து உபசரித்தனுப்பித் திருவேற்காட்டு நாதனைத் தினமும் வணங்கிவருங் கடப்பாடுடையவராய் வாழ்ந்து வந்தனர். இங்ஙனமிருக்குநாளிலே சிவனடியார்கள் [illegible]

க்குநா ளதிகமாகவந்துகொண்டிருந்தமையால் அவர் தம்மிடத்திலுள்ள திரவியங்களெல்லாஞ் செலவாகிவிடத் தனது வீடு, விளைநிலம், மாடு, அடிமைமுதலியவற்றை விற்றுஞ் சிவனடியார்கட்கு மகேச்சுரபூசை வழுவாது மனமகிழ்ச்சியுடனடத்திவந்தனர். சிலநாளிற்குப்பின் அங்ஙனமே செய்துவரப் பொருளின்மையால் கவலைகொண்டு தான் முன்னேபழகித தேர்ச்சியடைந்திருந்த சூதாட்டத்தினலே பொருள் சேகரிக்கவெண்ணி, அவ்வூரிலே சூதாடுவோரின்மையா லவ்வூரையகன்று சிவத்தலங்கடோறுஞ் சென்று சுவாமிதரிசனஞ் செய்து, சூதாடலால் வரும்பொருளினைக்கொண்டு மகேசசுரபூசை செய்துவந்து கும்பகோணத்தினை யடைந்து அங்கே சிவனடியாரல்லாத மற்றையரிடத்துச் சூதாடிப் பொருள்தேடி மகேச்சுரபூசை நடத்திவந்தனர். முதலாட்டத்திலே தான்தோற்றுப் பின்னாட்டங்களிலே பலமுறையும் வென்று பொருள்கொண்டு நற்சூதர், மூர்க்கர் என்னும் பெயர்களைப் பெற்று, சூதினலே வரும்பொருளைத் திருவமுதாக்குவோர்கள் கொள்ளத்தான் தீண்டாராகிச் சிவனடியார்கள் திருவமுது செய்தபின் தான் கடைப்பந்தியில் அமுதுசெய்துவருவர். இவரிப்பிரகாரம்சிலகாலமளவரையில்மகேச்சுரபூசைசெய்துகொண்டிருந்து அந்தமகத்தாகியசிவபுண்ணியத்தினலேகார்த்திகைமாதத்துமூலநக்ஷத்திரத்திலே சிவசாம்பிராச்சியமெய்தப் பெற்றனர்.

மூர்க்கநாயனார்சரித்திரமுற்றிற்று.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருவேற்காட்டுநாதர்மீது

எச்சரிக்கை.

இராகம்-ஸகானா-தாளம்-ரூபகம்.

அயன்மால்நித மிகவேத்திடும் அழகாஉயர் குழகா
வியன்மேனிய வேற்காட்டினில் விமலா எச்சரிக்கை. ௧
நீலஞ்செறி கண்டம்பெறு நீதா அருட்போதா
கோலந்திறை வேற்காட் டினில் கோனே எச்சரிக்கை
இமயாசல மகளுக்கொரு இறையே பெரு மறையே
எமையாண்டருள்வேற்காட்டினில்எந்தாய்எச்சரிக்கை
அறுமாமுக னணிமையங்கரன் அத்தா மிகச் சுத்தா
மறையோருறை வேற்காட்டினில் மகிபாஎச்சரிக்கை.
புவிமீதினி லன்பர்க்கருள் புண்யா அதி கண்யா
தவமேவளர் வேற்காட் டினில் சாமீ எச்சரிக்கை ௫
திருவாழியைக் கண்ணற்கருள் தேவே தேவர்கோவே
மருவார்பொழில்வேற்காட்டினில்மணியேஎச்சரிக்கை
பலராமனுக் கபயந்தரு பதியே சிவ கதியே
நலமேமிகு வேற்காட்டினில் நண்பா எச்சரிக்கை. ௭
குறுமாமுனிக்கருள்செய்திடுங் குருவேபெருந்திருவே
அறவோருறைவேற்காட்டினில்அரசேஎச்சரிக்கை. ௮
திருவூறலுற் சவங்கொண்டிடும் சிவமேஅறிஞர்கவமே
திருவாழ்தரு வேற்காட்டினில் சீலா எச்சரிக்கை. ௯
இடபந்தனி லினிதாய்வரும் ஈசா ஜெக தீசா
விடநீங்கிய வேற்காட்டினில் விமலா எச்சரிக்கை [illegible]

எச்சரிக்கை முற்றிற்று.

லாலி.

இராகம்-பைரவி-தாளம்-ரூபகம்.

அத்திமுகனைப்பெற்ற முத்தனுக்கும் லாலி
அம்பிகைதன் நேயனுக்குந் தூயனுக்கும்லாலிலாலி. ௧
பத்தர்மகிழ் ஐயனுக்கும் துய்யனுக்கும் லாலி
பண்ணவர்தம் நேசனுக்கும் ஈசனுக்கும்லாலிலாலி. ௨
கந்தமலர்ப் பாதனுக்கும் நீதனுக்கும் லாலி
கருணைபொழி அத்தனுக்கும்நித்தனுக்கும்லாலிலாலி. ௩
எந்தனெஞ்சு வாசனுக்கும் தேசனுக்கும் லாலி
என்பணிந்தமெய்யனுக்கும்செய்யனுக்கும்லாலிலாலி. ௪
முன்வினை நீப்பவற்கும் காப்பவற்கும் லாலி
முழுமறையின் மூலனுக்கும் சீலனுக்கும்லாலிலாலி. ௫
உன்னருநன் நாதனுக்கும் போதனுக்கும் லாலி
ஓங்காரசொரூபனுக்கும் நிரூபனுக்கும் லாலிலாலி. ௬
மணிமிடற்றுக் கண்டனுக்கும் அண்டனுக்கும் லாலி
மதிதரித்த முடியனுக்கும் துடியனுக்கும்லாலிலாலி. ௭
பணிநிறைந்த கோலனுக்கும் மூலனுக்கும் லாலி
பகர்யானை யுரித்தோற்கும் தரித்தோற்கும்லாலிலாலி.
தண்ணருளை யளிப்பவற்கும் களிப்பவற்கும் லாலி
தமிழ்மறையில்மோகனுக்கும்ஏகனுக்கும்லாலிலாலி. ௯
மலைவளையிலே யுறைபவற்கும் நிறைபவற்கும் லாலி
வேற்காட்டு நாதனுக்கும் நீதனுக்கும் லாலிலாலி. ௧௦

லாலி முற்றிற்று.

மங்களம்.

இராகம்-அசாவேரி-தாளம்-ஆதி.

வேற்காட்டு வாசனுக்கு ஜெயமங்களம்-எங்கள்
விமலேந்தன் நேசனுக்குச் சுபமங்களம்
தோற்போர்வைகொண்டவற்கு ஜெயமங்களம்-அன்பர்
துன்பொழித்த ஆண்டவற்குச் சுபமங்களம் (௧)

ஆறுமுகன் அத்தனுக்கு ஜெயமங்களம்-தோளில்
அரவணிந்த சுத்தனுக்குச் சுபமங்களம்
ஈறுமுதல் அற்றவற்கு ஜெயமங்களம்-உலகம்
எங்குநிறை உற்றவற்குச் சுபமங்களம் (௨)

திரிபுரத்தை எரித்தவற்கு ஜெயமங்களம்-மதி
திகழ்கங்கை தரித்தவற்குச் சுபமங்களம்
எரிமழுவை பிடித்தவற்கு ஜெயமங்களம்-கொடும்
இருள்விடத்தைக் குடித்தவற்குச் சுபமங்களம் (௩)

நீறுபூண மெய்யனுக்கு ஜெயமங்களம்-அதி
நின்மலனாந் தூயனுக்குச் சுபமங்களம்
வீறுமறை மூலனுக்கு ஜெயமங்களம்-தெய்வ
விண்ணவர்தம் சீலனுக்குச் சுபமங்களம். (௪)

சடைமுடி தரித்தவற்கு. ஜெயமங்களம்-செந்
தமிழ்மொழி விரித்தவற்குச் சுபமங்களம்
விடையில்வரும் ஈசனுக்கு ஜெயமங்களம்-தூய
வேற்காட்டு வாசனுக்குச் சுபமங்களம். (௫)

மங்களம் முற்றிற்று.

திருவேற்காட்டீசன்றன் திருவடிவாழ்க.